தமிழ் இலக்கியங்களின் காலம் பற்றி

வையாபுரியாரின் கணிப்பு

அ. கா. பெருமாள்

விற்பனை உரிமை :
க்ரியா
268, ராயப்பேட்டை ஹைரோடு
சென்னை 600 014.

உ

Bibliographical Data

Title of the Book : Vaiyapuri Pillai on the choronology of Tamil Literature

Author : A. K. Perumal
Asst. Prof in Tamil
Arignar Anna College
Aralvaimoly
Kanyakumari District

Language : Tamil

Edition : First

Date of Publication : 19 June 1983

Copy right holder : Author

Printers : Ratna Printing House
Nagercoil.

Price : Rs. 6

Publisher : A. K. Perumal
416-C. 'Pushpa'
Ramavarmapuram
Nagercoil.

Selling Right : cre - A
268, Royapeta High Road
Madras
600 014.

சமர்ப்பணம்

அம்மாவுக்கு

முகவுரை

'ஒரு மொழித்துறையின் தலைவர் ஆழ்ந்து அகன்ற அறிவுடையவராகவும் உண்மையைத் தேடும் நாட்ட முடையவராகவும் இருந்தால்தான் அத்துறையின் கண் மொழி, இலக்கிய வளர்ச்சியின் பல்வேறு வகையான சாத்தியக் கூறுகளைப் பற்றிச் சிந்திக்கவும் அவற்றைச் செயல்படுத்துவதோடு ஓர் இலக்கியப் பிரக்ஞை உள்ள உள்வட்டத்தையும் உருவாக்க முடியும் (யாத்ரா–16 பின்னோக்கிய பார்வையில் வையாபுரியார். டாக்டர் C. ரவீந்திரன்). உண்மையான ஆராய்ச்சியாளனுக்கு உள்ள தகுதியும் இதுதான். மாறுபட்ட மனோபாவத்தை மொழி, பண்பாடு இரண்டிற்கும் எதிரான சூழ்ச்சி என எண்ணி அவற்றை எதிர் நோக்க அஞ்சிக் கூறியது கூறலைத் தங்கள் ஆய்வின் ஒரு கோட்பாடாகக் கொண்ட நிலையைத் தமிழ் இலக்கிய வரலாற்றை எழுதியவர் களிடையே காணமுடியும். அதனால் உண்மை ஆய்வாளர் களை, உண்மையைத் தேடியவர்களை மறைப்பது அந்தக் கோட்பாட்டின் ஒரு பகுதியாகி விட்டதை இன்று காண முடிகிறது. பேராசிரியர் வையாபுரியார் மறக்கடிக்கப் படுகின்ற உண்மை ஆய்வாளர்களில் ஒருவர்.

பேராசிரியர் வையாபுரியார் வாழ்ந்த காலகட்டத்தில் தமிழ் இலக்கியங்கள் ஏட்டிலிருந்து அச்சில் ஏறிக் கொண்டிருந்த நிலை இருந்தது. அது தொல்பொருள் ஆய்வுத் துறை முழுமை பெருத காலம். அப்பொழுது தென்னிந்தியக் கல்வெட்டுக்கள் முழுமையாக வெளிவர வில்லை. அன்று, தமிழ்ப் பண்டிதர்களின் ஆராய்ச்சியும் முயற்சியும் சிரத்தையுடன் செயல்பட்டுக் கொண்டி ருந்தன. தேசியம், ஆன்மிகம், தமிழ் எனப் பரந்து பட்ட நிலையில் அறிவுக் கண்ணோட்டம் தமிழ்ப் பண்டி தர்களிடம் நிலைபெற்றிருந்த தன்மையை அப்போது

காண முடியும். அன்று, தமிழ்ப் பாரம்பரியத்தை உணர சமஸ்கிரத அறிவு வேண்டும். அது அந்நிய மொழியன்று என்னும் மனோபாவம் நிலவியிருந்தது. அந்தக் கால கட்டத்தில் வாழ்ந்த பேராசிரியர் வையாபுரியார், வாழ்க்கைக்கும் படைப்பிற்கும் உள்ள ஒற்றுமை உணர்வை உணர்ந்தவராய் விளங்கினார். இலக்கியப் பிரக்ஞை உடையவராய் வாழ்ந்தார்.

வையாபுரியாரின் நூல்பதிப்பு முயற்சி டாக்டர் உ. வே. சாமிநாத அய்யரின் முயற்சிக்கு நிகரானது. சில சமயம் அவர் அய்யரவர்களை விடச் சற்று மேலேயும் சென்றிருக்கிறார். ''பாட வேறுபாடுகளைத் தக்க சான்றுகளும் ஆராய்ச்சியும் இல்லாமல் திருத்துவது தகாது என்ற நிலையில் பழம் சுவடிகளைக் கண்டுபிடித்து அப்படியே ஏட்டில் உள்ளவாறு பதிப்பித்த அய்யரவர்களின் நூல் பதிப்புப் பணியை விஞ்ஞான பூர்வமாகத் தமிழுலகிற்கு அறிமுகப்படுத்தியவர் வையாபுரியார். இவர் தொடங்கி வைத்த திறனாய்வு முறையில் (texual criticism) அமைந்துள்ள நூல்பதிப்பு முறை இன்னும் வளரவேயில்லை" (யாத்ரா 16 பின்னோக்கிய பார்வையில் வையாபுரியார். டாக்டர் C. ரவீந்திரன்)

வையாபுரியார் எழுதிய நூல்களின் எண்ணிக்கை 21. அவை பல்வேறுபட்ட கட்டுரைகளின் தொகுப்பு ஆகும். தமிழின் மறுமலர்ச்சியிலிருந்து திராவிட மொழிகளின் ஆராய்ச்சிவரை அவர் காலூன்றி இருக்கிறார். சிறுகதை நாவல் ஆகிய துறைகளிலும் பரிசோதனை செய்தார். புதுமைப்பித்தனைப் பற்றி 1951-ல் கட்டுரை எழுதிய தமிழ்ப் பேராசிரியர் அவர். ஆனால் நாவல் சிறுகதை ஆகிய துறைகளில் அவர் முழு வெற்றி அடையவில்லை. அவர் கவிதைகளும் எழுதியிருக்கிறார். 41 நூல்களைப் பதிப்பித்திருக்கிறார். அந் நூல்களின் முன்னுரை முழுக்கவும் ஆய்வு நெறியில் எழுதப்பட்டவை. கட்டனைப் பதிப்பிக்க வேண்டும் என்ற அவரது

ஆசை கடைசி வரை நிறைவேறவேயில்லை. 1949-ல் R. K. சண்முகம் செட்டியார் பேராசிரியர், ஸ்ரீனிவாச ராகவன், பி. ஸ்ரீ ஆகியோருடன் சேர்ந்து கம்பனைப் பதிப்பிக்க முயற்சி செய்தார். முடியவில்லை. 1950-ல் சா. கணேசனுடன் செய்த முயற்சியும் வீணானது. 1952-ல் வை. கோவிந்தனுடன் செய்த ஒப்பந்தமும் நிறைவுபெறவில்லை.

வையாபுரியாரின் தமிழ்ப்பணிகளில் முக்கியமானது தமிழகராதியை வெளியிட்டதுதான். தமிழகராதி வேலை 1913-ல் ஆரம்பித்து 1926 வரை மந்தமாக நடைபெற்றது. அந்த நிலையில் வையாபுரியார் அப்பணியை ஏற்றார். முதல் 13 ஆண்டுகள் நடந்த வேலையில் 20,000 சொற்களே தொகுக்கப்பட்டிருந்தன. வையாபுரியார் 13 ஆண்டுகள் உழைத்து அகராதியின் 6 தொகுதிகளையும் வெளியிட்டார். 6 தொகுதிகளிலும் சேர்ந்து 3928 பக்கங்களும் 104,405 சொற்களும் உள்ளன. ஏழாவதாக, விடுபட்ட சொற்பொருள்களைக் கொண்ட அனுபந்தத் தொகுதியையும் அளித்துள்ளார். அந்த அகராதியில் ஒரு தமிழ்ச் சொல்லுக்கு ஆங்கிலப் பொருள், தமிழ்ப் பொருள், அச்சொல்லின் மூலவடிவம், உறுப்பிலக்கணம், மேற்கோள் விளக்கம் அச்சொல்லுக்கு ஆங்கில வரிவடிவம் ஆகியன கொடுக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை தமிழின் பல்வேறு துறைகளில் உழைத்தாலும் அவர் தமிழ் இலக்கியங்களின் காலம் பற்றி வெளியிட்ட கருத்துக்கள்தான் அவருக்குப் பெயரைக் கொடுத்தன. அவரை எதிர்க்கின்றவர்களுக்கும் வெறுக்கின்றவர்களுக்கும் அதுவே காரணம் என்றும் கூறலாம்.

ஓர் இலக்கியம் எந்தக் கால கட்டத்தில் தோன்றியது என்பதை உண்மையாக உணர்கின்றபோதுதான்

அதன் இலக்கியப் போக்கை அனுபவிக்க முடியும் என நம்பியவர் வையாபுரியார். அவர் வாழ்ந்த கால கட்டத்தில் இலக்கியங்களின் காலத்தைக் கணிக்க வேண்டிய கட்டாயம் இருந்தது. அதனால்தான் அவர் கால ஆராய்ச்சியில் இத்தனை ஈடுபட்டார். தமிழ் இலக்கியங்களின் காலங்களை வரையறை செய்தவர்களில் சி. வை. தாமோதரன்பிள்ளை, K. ஸ்ரீனிவாசப்பிள்ளை, M. S. பூரணலிங்கம்பிள்ளை, மறைமலைஅடிகள், K. N. சிவராஜபிள்ளை, சோமசுந்தரபாரதியார் கா. சு. பிள்ளை, ர. ராகவையங்கார், மு. ராகவையங்கார், P. T. ஸ்ரீனிவாசஅய்யங்கார், V. R. ராமசந்திரதீட்சதர், ஆகியோர் குறிப்பிடத்தகுந்தவர்களாவர். பேராசிரியர் வையாபுரியாருக்கு இப்பட்டியலில் முதலிடம் வகிக்க எல்லா தகுதியும் உண்டு.

பேராசிரியரின் ஆராய்ச்சிமுறை முழுக்கவும் அறிவு அடிப்படையில் இயங்கியது. அது விஞ்ஞான பூர்வமானது. அதில் வெறி கொண்ட உணர்ச்சியைக் காண முடியாது. அவரது ஆராய்ச்சியின் நோக்கம் உண்மை தேடலே. அவரைப் பற்றி அவரே இப்படிக் கூறுகிறார். "எனது நட்பு பிராமணர் அல்லாதார் என்னும் ஜாதி வேறுபாடுகளைக் கடந்தது. வடமொழி தமிழ் என்னும் வேறுபாடுகளைக் கருதாதது. பண்டிதர்கள் ஆங்கிலம் கற்ற தமிழர்கள் என்னும் சிறு வரம்புகளை மதியாதது. சைவம் வைஷ்ணவம் முதலிய மதவேறுபாடுகளைக் கனவிலும் நினையாதது. சங்ககாலத் தமிழ் இடைக் காலத் தமிழ் என்பனவற்றில் ஏதேனும் ஒன்றில் அபிமானம் வைத்து அதனையே கற்பது என்னும் நியதியைக் கொள்ளாதது. அறிவு வளர்ச்சியும் தமிழுணர்வும் பெருக்கமும் உண்மை நாட்டமும் நடுநிலையுமே என்னை ஊக்கி வந்தன"

பேராசிரியரின் ஆராய்ச்சியில் நூலின் அகச்சான்றுகளையும் புறச்சான்றுகளையும் நுட்பமாய்க் கண்டு விருப்பு

வெறுப்பின்றி வெளிப்படுத்தும் தன்மையைக் காண லாம். ஒரு நூலின் காலத்தைக் கணிக்க நூலின் மொழிநடை, இலக்கணவழக்கு, அவ்வழக்கு அதிகம் பயன்படுத்தப் பட்டிருக்கிறதா இல்லையா என்பது பற்றிய விளக்கம், அவ்வழக்கு பற்றிக் கூறும் இலக்கண நூலின் மேற்கோள் அதன் காலம், அவ்வழக்கு வேறு நூல்களில் கையாளப்பட்டிருக்கிறதா கையாளப் பட்டி ருக்குமானல் அவ்வழக்கு நிலவிய காலகட்டம், கல்வெட் டுக்களில் அந்நூலின் தொடர்பான சரித்திரச் செய்தி கள் வருகின்றனவா என்பதுபற்றிய விளக்கம், செவிவழிக் கதைகள், அந்நூலைப் பற்றிப் பிற தமிழ்ப் புலவர்கள் குறிப்பிடும் செய்திகள் அப்புராணச் செய்திகள் செல் வாக்கு பெற்றது பற்றிய காரணம் நூலில் சமஸ்கிரத சொற்களின் செல்வாக்கு, சமஸ்கிரத காவிய நாடகங் களின் செல்வாக்கு, சமஸ்கிரத நூல்களின் கருத்துக் கள் செய்யுட்கள் ஆகியவற்றைக் கையாளும் இடங்கள் ஆகியன பயன்படுத்தப் பட்டிருப்பதைக் காணலாம்.

இவற்றில் இலக்கணவழக்கு ஏனைய நூல்களின் கருத்தொற்றுமை இவற்றிற்கு முதலிடம் கொடுத்திருப் பது அவரது நுண்ணிய ஆராய்ச்சியின் உழைப்பைக் காட்டும். இலக்கணவழக்கு அதிக அளவில் வரும் போது மட்டும்தான் அந்தக் காரணத்தைத் தமக்குச் சாதகமாக எடுத்துக் கொள்ளுகிறார். சமஸ்கிரத நூல் களின் கருத்துக்கள் செய்யுட்கள் ஆகியன குறிப்பிட்ட நூலில் வரும் இடத்தைச் சுட்டிக் காட்டி சமஸ்கிரத நூலின் சூத்திர வடிவத்தை அப்படியே தருகிறார். சமஸ்கிரத நூல்களின் செல்வாக்கைக் குறிப்பிடும் போது அதன் காலகட்டத்தை அது தமிழ்நாட்டில் பரவ எடுத்துக்கொண்ட காலம் – இவற்றைச் சுட்டிக் காட்டிக் குறிப்பிட்ட நூலின் காலத்தை வகுக்கிறார்.

சமஸ்கிரத நூல்களின் கால கட்டத்தைக் குறிப் பிடும் போது விண்டர்நீஸ், பெரிடேல் கீத் போன்

ஆராய்ச்சி

- அகச்சான்று
  - இலக்கண வழக்கு
  - அவ்வழக்கு வரும் இலக்கண நூற்களின் காலம்
  - நூலில் வரும் சரித்திரக் குறிப்புகள்
  - பிற நூற்களின் கருத்தொற்றுமை
  - வடமொழிச் சொற்கள் கருத்துக்கள்—செய்திகள் செய்யுட்கள்—செல்வாக்கு அதன் காலம்
- புறச்சான்று
  - ஏனைய தமிழ் நூற்களின் மேற்கோள்
  - உரையாசிரியரின் மேற்கோள்
  - கல்வெட்டுச் சான்றுகள்
  - செவிவழிக்கதைகள்

றோர்களைத் தமக்கு முன்னோடியாக வைத்துக் கொள்ளுகிறார். கோள்களின் போக்கைக் கணக்கிட்டு காலம் கணிக்கும் திரு. L. D. சாமிக்கண்ணுபிள்ளையிடம் அவருக்கு ஈடுபாடுண்டு. முரண்பாடின்றித் தெளிவாகக் காலம் தெரியும் நூல்களையும் (அப்பர் தேவாரம், சம்பந்தர் தேவாரம்) தாம் ஏற்கெனவே காலம் வகுத்து முடிவு கட்டிய நூல்களையும் தாம் புதிதாகக் காலம் வகுக்கும் நூல்களுக்குத் துணைக்குப் பயன்

படுத்திக் கொள்ளும் நிலை அவரிடம் இருக்கிறது. ஒரு நூலின் காலத்தைக் கணிக்கும் போது பிறர் கூறிய கருத்தை மறுத்துக் கூறும் செயல் இவரிடம் குறைவு என்றேகூறலாம். தாம்கருதிய கருத்தை நிலைநாட்டவேண்டிய காரணங்களை விஞ்ஞான ரீதியில் ஆராய்ந்து வெளிப்படுத்தும் முறைதான் இவரிடம் இருப்பதைக் காணலாம்.

பேராசிரியர் வையாபுரிப்பிள்ளையின் தமிழ்த் தொண்டைத் தமிழுலகம் இன்று எந்த அளவுக்குப் போற்றுகிறது என்பதைத் திட்ட வட்டமாகக் கூற முடியும். வையாபுரியார் வாழ்ந்த காலத்திலேயே அவருக்குச் சென்னைப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் பதவி கொடுக்ககூடாது என்று கூறியவர்கள் உண்டு. எனினும் அன்றைய ஆராய்ச்சி மனேபாவம் உணர்வு நிலையினின்று அறிவு நிலையில் இயங்கியதால் சிலரால் அவர் மதிக்கவும் பட்டார். அவரது ஆராய்ச்சி உண்மை பூர்வமானது என்பது சிலருக்குத் தெரிந்திருந்தது.

பிற்பட்ட காலங்களில் தமிழ் மொழி மீது ஏற்பட்ட போலித்தனமான பற்று, உணர்வு ரீதியான ஆராய்ச்சி, சமஸ்கிரதமொழி மீது காழ்ப்பு, அம்மொழியோடு தொடர்புடையவர்களிடம் வெறுப்பு, தேசியம் ஆன்மிகம் பற்றிய பரிகசிப்பு, எல்லாம் அரசியலை மட்டுமல்ல உண்மை தேடலையும் அறிவு ரீதியான ஆராய்ச்சியையும் தமிழையும் பாதித்திருக்கின்றன. அதனல் உண்மை இலக்கியங்கள் நலியவும் வையாபுரியாரைப் போன்றவர்கள் மறக்கடிக்கப் படவும் காரணமாயின. இந்த போலிச் சூழ்நிலையால் பாரம்பரியமுடைய மொழிக்கு வந்த தடங்கலைத் தான் இன்று நாம் காண்கிறோம்.

தமிழ் இலக்கியங்களின் காலங்களைக் கணிக்க வந்தவர்கள் எல்லோருமே வையாபுரியாரின் காரணங்களை அறிவு பூர்வமாக மறுக்காது முத்திரை குத்தி அவரைப்

பழித்து விட்டுத் தமிழ் நூல்களைத் தொன்மையான காலத்திற்குத் தள்ளித் திருப்திப் பட்டுக் கொள்ளும் நிலையைத் தமிழ் இலக்கிய வரலாற்று நூல்களில் பரக்கக் காண்கிறோம். அந்த நிலையும் இன்று கடந்து விட்டது. வையாபுரியாரைப் பொய்யாபுரி என்று கூறிய மகாகவிகளும் இன்று இல்லை. இன்று அவரை மேற்கோள் காட்டுவதே பாவம் என்னும் நிலை வந்துவிட்டது. அவரின் காரணங்களை மேற்கோள்காட்டி மறுத்தாலே அவர் பெயரை மாணவன் அறிந்து விடுவான் என்பதற்காக வையாபுரியாரையே மறக்கடிக்கும் சூழ்நிலை உருவாகி விட்டது.

பேராசிரியர் வையாபுரியார், சங்க இலக்கியங்களிலிருந்து தொடர்ச்சியாக எல்லா தமிழ் இலக்கியங்களின் காலங்களை வரன் முறையாக வகுத்து உரைக்க வேண்டும் என்னும் நெறியோடு கட்டுப்பாட்டோடு தம் ஆராய்ச்சியை நிகழ்த்தவில்லை. வழக்கறிஞராக இருந்த அவர் தமிழ் இலக்கியங்களை விருப்பு வெறுப்பின்றிப் படிக்க ஆரம்பித்து அதில் உள்ள ஈடுபட்டால் முழு நேரத் தமிழறிஞர் ஆனார். ஆங்கிலமும் வடமொழியும் அவரது ஆராய்ச்சி முழுமையாக உதவின.

அவர் அவ்வப்போது எழுதிய ஆராய்ச்சிக் கட்டுரைகளை வார மாத இதழ்களில் வெளியிட்டு வந்தார். தாம்எழுதிய கட்டுரைகளை நூல்வடிவில் கொண்டுவர வேண்டும் என்றும் அவரது ஆசை சென்னைப் பல்கலைக் கழகத்திலிருந்து அவர் ஓய்வு பெற்ற (1946) பின்பு தான் நிறைவேறியது. ஒரு குறிப்பிட்ட நூலின் காலத்தை வரன்முறையோடு வகுத்துக் காரணகாரியங்களை ஆராய்ந்து அந்நூலின் காலம் இதுதான் என்றமுழுமையோடு கட்டுப்பாட்டோடு கட்டுரைகளைத் திட்டமிட்டு எழுதிய நிலை வையாபுரியாரிடம் இல்லை. அவர் குறிப்பிட்ட நூலின் காலத்தை தாம் ஆராய்ந்த அளவிற்கு காரணங்களைத் தொகுத்து

இதழ் ஒன்றில் வெளியிடுவார். பின் அதே கருத்தை உறுதி செய்ய மேலும் காரணங்கள் கிடைத்தபின் அவற்றைத் தொகுத்து வேறு இதழில் வெளியிடுவார். பின் அதே கருத்தை உறுதி செய்ய மேலும் காரணங்கள் கிடைத்தபின் அவற்றைத் தொகுத்து வேறு இதழில் வெளியிடுவார். இரண்டும் ஒரே நூலைப்பற்றிய காலத்தைக் கணித்துக் கூறும் காரணங்கள் அடங்கிய கட்டுரை ஆயினும் அவை நூலில் இடம்பெற்ற போதும் வரன் முறையாக வகுக்கப்பெறவில்லை. மட்டுமன்றி அக் கருத்துக்கள் ஒரே நூலில் கூட இடம் பெறுமலும் இருந்த நிலை உண்டு. எடுத்துக்காட்டாக திருக்குறளின் காலம் பற்றிய கருத்துக்களை அறிய இலக்கிய மணிமாலை, காவிய காலம். தமிழ்ச்சுடர் மணிகள் ஆகிய மூன்று நூல்களையும் படிக்கவேண்டும், சிலப்பதிகாரத்தைப் பற்றிய காலக் கணிப்பு, இலக்கிய விளக்கம், காவிய காலம், இலக்கிய மணிமாலை ஆகிய மூன்று நூல்களிலும் வருவதைக் காண லாம், எனவே ஒரு நூலின் காலத்தை அறிய ஒரு நூலை மட்டும் படித்தால் போதாது. மேலும் பேராசிரியரின் நூல்கள் எல்லாம் இப்பொழுது கிடைப்பதுமில்லை. அதனுல் ஒரு இலக்கிய மாணவன் வையாபுரியாரின் தமிழ் இலக்கியங்களின் காலம் பற்றிய கணிப்பை அறிய இந்நூல் எழுதப்பட்டுள்ளது. இந்நூலில் நான் செய்தது எல்லாம் பேராசிரியரின் 21 நூல்களைப் படித்து தமிழ் இலக்கியங்களின் காலம் பற்றி அவர் பரக்கக் கூறிய கருத்துக்களை வரன் முறைப் படுத்தியதுதான். இதைத் தொடர்ந்து அவரைப்பற்றிய ஆராய்ச்சி நூலை வெளியிடுவேன்.

இப்படி ஒரு சிறிய பணியை நான் செய்ய விரும்பிய போது எனக்குப் பலவகையில் உதவிபுரிந்தவர் பேராசிரியர் வையாபுரியாரின் அன்புச்சீடர் பேராசிரியர் மு. சண்முகம்பிள்ளை அவர்கள் அவரை அறிமுகப்படுத்தி உவியவர் கன்னியாகுமரி. பத்திரிகை ஆசிரியர் திரு. P. S. மணி அவர்கள்.

என் எல்லா இலக்கிய முயற்சிகளுக்கும் ஊக்கமளித்து என்னை உருவாக்குபவர் எழுத்தாளர் சுந்தரராமசாமி அவர்கள் என் ஆய்வுகளுக்கு எப்போதும் உதவிவருபவர். பேராசியர் பத்மனாபன் அவர்கள்.

இவர்களுக்கு என்றும் என் நன்றி உரியது.

அ. க. பெருமாள்.

உ

அணிந்துரை

மு. சண்முகம் பிள்ளை,
சிறப்புநிலைப் பேராசிரியர்,
சுவடிப்புலம் - ஓலைச்சுவடித்துறை,
தமிழ்ப் பலகலைக் கழகம்.

ஆராய்ச்சி என்பது எல்லாக் காலத்தும் உள்ளதே. மனிதனின் அறிவு வளர்ச்சிக்குத்தகக் காலந்தோறும் பல்வேறு மாறுதல் பெற்று உயரிய நிலையில் அதுவளர்ந்து செல்லும் இயல்பினது, பொருள்களின் ஆராய்ச்சி போன்றனவே மொழி இலக்கிய ஆராய்ச்சிகளும். சங்க நூல்களிலேயே பல இடங்களில் ஆய்தல், ஆராய்தல் என்னும் சொற்களின் பல்வேறு வினைவடிவங்களும் பயின்று வந்துள்ளன. பொருள்களை ஒன்றுடன் ஒன்று ஒப்பிட்டு நோக்கியுரைக்கும் உவமையும் ஆராய்ச்சியின் விளைவாகப் பிறப்பதே. கருத்துகள், நிகழ்ச்சிகள் முதலியவற்றின் இயைபு கொண்டு அவற்றின் முன்பின் நிலைகளை அறியலாகும். இலக்கியம் இலக்கணம், கல்வெட்டுத் தொடக்கமான வரைவுகள் முதலியன எல்லாம் நமக்கு வழிகாட்டி உதவுவனவாம்.

> "எதுக்க ளாலும் எடுத்த மொழியாலும் மிக்குச்
> சோதிக்க வேண்டா சுடர்விட்டுளன் எங்கள் சோதி
> (தேவாரம் : 3 – 54 – 5)

எனத் திருஞானசம்பந்தர் ஒளிமயமான இறைவனைக் காரணம் காட்டியும் எடுத்துக்காட்டுகள் தந்தும் ஆராய்தல் வேண்டா என்கிறார். எனவே, ஒரு பொருளை

ஆராயுமிடத்து தக்க காரணங்களையும் அவற்றை நிறுவு வதற்கான எடுத்துக் காட்டுகளையும் தருதல் இன்றிய மையாதது என்பது விளங்கும்.

முனைப்பாடியார் தாம் உரைத்த அறநெறி சாரத்தில்

'காய்தல் உவத்தல் அகற்றி ஒருபொருட்கண்
ஆய்தல் அறிவுடையார் கண்ணதே-காய்வதன்கண்
உற்றகுணம் தோன்றா தாகும் உவப்பதன்கண்
குற்றமும் தோன்றாக் கெடும்'

என்று ஆய்வாளர் கடமையை அறிவுறுத்துகின்றார். விருப்பு வெறுப்பினால் ஒன்றன் குணகுற்றங்களை உள்ளது உள்ளபடி மதிப்பிடும் பாங்கு இல்லாது போகும் என்றும் நடுநிலையில் நின்று நோக்குதல் வேண்டும் என்றும் இதனால் தெரியவரும். 'அம் சொல் நுண் தேர்ச்சிப் புலவர்' (புறம். 235:13) என்று அறிஞரைப் போற்றுதலும் ஈண்டு நோக்கத் தரும்.

தமிழ் இலக்கிய வரலாற்று ஆராய்ச்சிகள் சென்ற 19-ஆம் நூற்றாண்டுத் தொடக்கமாகத்தான் கால்கொண்டு வருகின்றன. தமிழ் நூல்களுள் பலவும் 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில்தான் அச்சு வடிவம் பெறலாயின. பழந்தமிழ் நூல்களாகிய பத்துப்பாட்டு, எட்டுத் தொகை, பதினெண்கீழ் கணக்கு நூல்கள் எவையெவை என்பதே அக்காலில் தெளிவுபடாமல் இருந்தது. நூல்களை அச்சிடும் பணியில் ஈடுபட்டாரும் மற்றும் அறிஞர் பெருமக்கள் சிலரும் அவற்றை இனங்கண்டு வெளிப்படுத்தினார்கள். பத்துப்பாட்டு முதலான நூல்கள் எவையெவை என்பதை யாழ்ப்பாணம் சி. வை. தாமோதரம் பிள்ளையவர்கள் தாம் பதிப்பித்த நூல்களின் பதிப்புரைகளில் தெளிவுபடுத்தியுள்ளார்கள். இவருக்குப் பின் பதிப்புத்துறையில் சிறந்து விளங்கிய டாக்டர் உ. வே. சாமிநாதையர் முதலியோரும் தத்தம் பதிப்புகளில் நூல்

வரலாறு, ஆசிரியர் வரலாறு முதலியவற்றை விளக்கியுள்ளார்கள். அச்சில் வந்த தமிழ் நூல்கள் பற்றிய விவரங்களைத் தொகுத்துத் தரவும் ஜான் மர்டாக் பாதிரியார் முதலியோர் முன்வந்தனர். ஏட்டுச் சுவடிகளின் விவரங்களும் வெளிவரலாயின. எனினும் இருபதாம் நூற்றாண்டில்தான் இலக்கிய வரலாற்று ஆராய்ச்சிகள் எழுதற்கான கருவி நூல்களும் அவற்றின் பயனாக ஆய்வுரைகளும் ஆய்வு நூல்களும் பலவாக வெளிவரத் தொடங்கின.

சிறப்பாகத் தமிழுடன் ஆங்கிலம் முதலிய பிறமொழிகளையும் கற்ற அறிஞர் பெருமக்கள் இத்தகு ஆராய்ச்சிகளில் ஈடுபடலாயினர். அவர்கள் பழங்காலந்தொட்டு இற்றை நாள் வரை வரும் நமது இலக்கிய பாரம்பரியத்தையும் நமது தாய் மொழி காலந்தோறும் நிகழ்ந்த பற்பல தாக்குதல்களுக்குள்ளாகியும் தன் சீரிளமைத் திறங்குன்றாது காலத்திற்கேற்ற கோலம்பூண்டு வளர்ந்து வருதலையும் விளக்கு முற்படலாயினர், இத்தகு ஆராய்ச்சியாளர்களிடையே தமிழ் நூல்களின் வரலாற்றைத் தக்க சான்றுகள் கொண்டு அறிவியல் அடிப்படையில் நடுநிலையில் நின்று எடுத்துரைக்க முற்பட்டவர் பேராசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளையவர்களாவர். 'இருபதாம் நூற்றாண்டில் ஆய்வுத்துறைக்கு ஒரு வையாபுரியார்' என்று அறிஞர் போற்றும் சிறப்புக்கு உரியவராக அவர் திகழ்கிறார்.

பேராசிரியர் அவர்களின் ஆராய்ச்சி நெறிமுறைகள் குறித்து, டாக்டர் இராம. சுந்தரம் அவர்கள், 'வையாபுரிப் பிள்ளையின் ஆய்வு முறையும் திறனும்' என்னும் ஒருகட்டுரையில் நன்குவிவரித்துள்ளார்கள். இக்கட்டுரையில் பிள்ளையவர்களின் ஆராய்ச்சிப் போக்கும் நோக்கமும் நெறிமுறைகளும் பற்றி அவர் குறிப்பிடுவன ஈண்டு நோக்கத் தகும்:

"பேராசிரியர் தமிழாய்வுலகில் ஒரு புதிய யுகத்தைத் தோற்றுவித்தார் எனலாம். புராணங்கள், செவிவழிச் செய்திகள், பழம் பாடல்களுக்குத் தம் மனம் போன போக்கில் விளக்கம் காணல், கண்மூடிப்பற்று ஆகியவற்றை ஆதாரமாகக் கொண்டு தமிழ்ப்புலவர்கள், நூல்களின் காலங்களை உறுதி செய்யுத் தமிழறிஞர்கள் தலைப்பட்ட காலத்தில் இலக்கியங்களின் உண்மையான பாடத்தையும் பொருளையும், இலக்கியங்களில் வழங்கும் சொற்கள், அவற்றின் பொருள், வரலாறு, கல்வெட்டு, பிறமொழி இலக்கியம் ஆகியவற்றையும் துணையாகக் கொண்டு அறிவியல் வழிப்பட்ட ஆய்வை மேற்கொண்டு ஒரு நூலின் அல்லது புலவரின் கால மேல் எல்லை, கீழ் எல்லைகளை முதலில் வகுத்து, இதன் பின் அதற்குட்பட்ட ஒரு காலத்தைப் படிப்படியாக, தக்க சான்றுகளுடன் வரையறை செய்யும் ஒரு புதுவழியைத் தமிழாய்வு உலகில் தோற்றுவித்த பெருமை இவரையே சாரும்.

இவ்வகைப்பட்ட ஆராய்ச்சி நெறியைக் கடைப்பிடித்து ஆய்வு நடத்தும் பேராசிரியர் இலக்கியம், இலக்கணம், மொழிநூல், கல்வெட்டு, பிறநாட்டார் குறிப்பு, பிறமொழி இலக்கியம், சமுதாய – அரசியல் சூழ்நிலை, இலக்கிய மரபுயாப்பமைதி ஆகிய பல மூலங்களில் (Sources) சான்றுகள் சேகரித்து முடிவெடுக்கிறார். கர்ண பரம்பரைச் செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கக்கூடாது என்றும், இலக்கிய வரலாற்றுக்கு மொழி நூலுணர்ச்சியும், சரித்திர உணர்ச்சியும் சிலாசாசன அறிவும் தேவை என்றும் உரைக்கிறார்"

சொல் புதிது சுவை புதிது பக். 55-56)

டாக்டர் இராம சுந்தரம் அவர்கள் மேலே தொகுத்துத் தந்தவாறு பிள்ளையவர்கள் எழுதிய ஆய்வுரைகள் அனைத்திலும் இப்பண்புகள் மிளிர்வதைக் காணலாம்.

தமிழ் மொழி வரலாறு இலக்கிய வரலாறுகளை மதிப்பிட நூல்களின் காலம், நூலாசிரியர்கள் வாழ்ந்த காலம் திட்டவட்டமாகத் துணியப்படல் வேண்டும். இந்த நோக்கில் இலக்கிய வரலாற்றை முழுமையாகத் திட்டமிட்டு எழுதி அவர் முற்றுவிக்கவில்லை. ஆனால் தாம் எழுதிய பல்வேறு இலக்கிய இலக்கணச்சிந்தனை ஆய்வுகளில் பெரும்பாலான நூல்களின் காலத்தைக் காட்டும் சான்றுகள் வரும்பொழுது குறிப்பிட்டுச் சுட்டிக் செல்வதனைப் பல்வேறு இடங்களிலும் காணலாம். பத்துப்பாட்டு-தொகை நூல்களின் கால வரன் முறைப்பற்றித் தனிப்பட ஆராய்ந்திருக்கிறார். தொல்காப்பியம், திருக்குறள், சிலப்பதிகாரம், முத்தொள்ளாயிரம், பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் கம்பராமாயணம் முதலிய காவியங்கள் ஆகியவற்றின் காலங்களைத் தனிப்பட விரிவாகவும் ஆராய்ந்து வெளிப் படுத்தியுள்ளார்.

பேராசிரியர் கண்ட முடிவுகளில் தொல்காப்பியர், திருவள்ளுவர், இளங்கோவடிகள் முதலியோர் காலங்களைக் கி. பி. 5 ஆம் நூற்றாண்டுக்குப் பின்பாகச் சுட்டியுள்ளார் என்பது கொண்டு பலரும் அவரைத் தூற்றியதுண்டு. 'தமிழ்த் துரோகி' என்று மேடைகளில் முழங்கியும் பத்திரிகை முதலியவற்றில் எழுதியும் வரலாயினர். இதனால் எல்லாம் அவர்கள் தாம் கண்ட உண்மைகளை மாற்றி எழுத முற்படவில்லை. 'வாய்மையே வெல்லும்' என்பதில் அசையாத நம்பிக்கை கொண்டிருந்தார். தாம் கண்டறிந்து உண்மைகளை விருப்பு வெறுப்பு இன்றி எப்பொழுதும் திட்பநுட்பமுடன் தெரிவித்தார்கள். தம்மை இதழ்வார் நிலையும் அவர்கள் ஓரிடத்தில் சுட்டிச் செல்வது ஈண்டுக் கருதத் தக்கது.

'தமிழ் மக்களில் ஒரு பகுதியாருக்குத்திருக்குறள், சிலப்பதிகாரம் இவற்றின் காலம் சமயக்கொள்கை

களைப் போல் ஆகிவிட்டது. இதன் பொருட்டுத் தங்கள் உயிரையும் கூட இழந்து விடுவார்கள் போல் தோன்றுகிறது. முதல் அல்லது இரண்டாம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டனவாக இந்நூல்களைக் குறித்தால், அதற்கு அவர்களுடைய மனம் ஒப்புவதில்லை. பிற்காலத்தனவாயிருக்கக்கூடும் என்று யாரேனும் கூறினால், அவரைத் தமிழ்த் துரோகி என்று பட்டங் கட்டி விடுகிறார்கள். இதனால், விஷம் நிரம்பிய காற்று நமது நாட்டில் உலவி வருகிறது. ஆராய்ச்சியை நெறித்துவிடுகிறார்கள். உண்மை தனது உயிருக்கே மன்றாட வேண்டியதாக இருக்கிறது ஆனால், ஆராய்ச்சியாளனுடைய கடமை தெளிவாகவே உள்ளது. உண்மையின் சார்பில் இரண்டொருவர் இருந்தாலும் அவர்களுடன் துணிந்து வாழ்வதே அவன் கடமை. அவ்வாறு செய்யாமற் போனால் அவன் அடிமை என்றே கருதத் தக்கவன்"

(காவிய காலம் 316—319)

பேராசிரியரைப் பொதுவாகக் குறைகூறுனோர் பலராயினும் அவர் எடுத்துக்காட்டிய சான்றுகள் ஒவ்வொன்றையும் தக்க ஆதாரம் காட்டி மறுத்துரைத்தார் இல்லை என்றே சொல்லலாம். ஒரு சிலர் எழுதிய மறுப்புரைகள் உணர்ச்சி வயப்பட்டனவாய் உள்ளனவேயன்றித் தக்க முறையில் அமைந்தன என்று சொல்லக்கூடவில்லை. புதியசான்றாதாரங்கள் கிட்டும் போது பேராசிரியர் அவர்கள் கொண்ட சில முடிபுகள் மாறலாம். பேராசிரியர் அவர்களும் தம் முடிவுகளைப் பின்னர் மாற்றி உரைத்த இடங்களும் உண்டு.

பேராசிரியர் எழுதிய தமிழ் நூல்களின் காலம் பற்றிய ஆய்வுகள் அவர் வெளியிட்ட பல்வேறு ஆய்வுத் தொகுதிகளிலும் பதிப்புகளிலும் விரவிக் கிடக்கின்றன.

பேராசிரியர் வெளியிட்ட நூல்களுள் பலவும் இப்பொழுது கிட்டுவதும் அரிதே. இந்த நிலையில் பேராசிரியர் அ.கா.பெருமாள் அவர்கள் பேராசிரியரின் நூல்கள் எல்லாவற்றையும் பார்த்துக் காலம் பற்றிய கருத்துரைகளைத் தொகுத்து ஒரு தனி நூலாக்கித் தந்துள்ளார். 'தமிழ் இலக்கியங்களின் காலம்பற்றி வையாபுரியாரின் கணிப்பு' என்னும் இந்நூல் தமிழ் நூலாய்வாளர்களுக்குப் பேராசிரியரின் காலக்கணிப்பு நிலையினை அறியப் பெருந்துணையாகவுள்ளது. பேராசிரியர் பெருமாள் அவர்கள் வையாபுரிப்பிள்ளையவர்களின் உரைகளை அப்படியப்படியே எடுத்துத் தந்திருப்பதும் பாராட்டத்தக்கது. சிற்சில இடங்களில் தொடர்புக்காகச் சிற்சில வார்த்தைகளை மாற்றித் தந்திருக்கிறாரே தவிரப் பொருள்மாற்றம் செய்யப்படவில்லை. எந்தெந்த நூல்களிலிருந்து செய்திகளைத் தொகுத்தார் என்பது விளங்கும் வகையில் நூற்பெயரும் உரிய பக்க எண்களும் அடிக்குறிப்பில் தந்திருந்தால் வாசகர் உரிய மூலத்தையும் கண்டு ஒப்புநோக்கத் துணையாய் இருந்திருக்கும். மேலும், ஒருசில ஆய்வாளர் பேராசிரியர் பிள்ளையவர்களின் பெயர் சுட்டியும் சுட்டாமலும் அவர்தம் காலக்கருத்துகளை மறுத்து எழுதினாரும் உளர். அத்தகு மறுப்புரைகள் பற்றிய குறிப்பும் அங்கங்கே உடன் தந்திருந்தால் கருத்து வளர்ச்சியினை ஒப்பிட்டுப் பார்க்க உதவியாயிருந்திருக்கும். இத்தகு விளக்கங்களை இனிவரும் பதிப்பில் ஆசிரியர் சேர்த்துத் தருவாராயின் இந்நூலின் பயன்பாடு மிகப் பெரிதாய் அமையும்.

நூலின் அனுபந்தமாகப் பேராசிரியர் வையாபுரிப் பிள்ளையவர்களின் வாழ்க்கைக் குறிப்புகள் தந்துள்ளார். இரண்டாவது அனுபந்தத்தில் பேராசிரியர் வெளியிட்ட 21 நூல்களும் அவற்றில் அடங்கிய கட்டுரை

விவரம் தரும் பொருளடக்கமும் சேர்த்துள்ளார். பேராசிரியர் பதிப்பித்த் நூல்களின் விவரம் மூன்றாவது அனுபந்தத்தில் தரப்பட்டிருக்கிறது.

'ஆசைபற்றி அறையலுற்றேன்' என்று கம்பர் உரைத்தாங்குப் பேராசிரியர் வையாபுரிப் பிள்ளையவர்களின் ஆராய்ச்சிகளில் முக்கியமாகத் தமிழ் நூல்களின் காலம் பற்றிய கருத்துரைகளை உலகமறியச் செய்ய வேண்டும் என்னும் பெருவிருப்பத்தால் ஈர்க்கப்பட்டுப் பேராசிரியர் அ. கா. பெருமாள் செயலாற்றியுள்ளார்.

பேராசிரியர் பிள்ளையவர்களின் தமிழ்ப் பணிகள் குறித்த ஒரு மதிப்பீட்டை இந்நூலாசிரியர் தமது முகவுரையில் தொகுத்துத் தந்துள்ளார். இவ்வாசிரியர் பேராசிரியர் வையாபுரிப்பிள்ளையவர்களின் தமிழ்ப்பணி போலித்தனமான பற்றுதலால் மறக்கடிக்கப்படுகிறது என்பதை வருத்தத்துடன் தெரிவித்துள்ளார். இலக்கிய மாணவன் ஒருவனுக்குப் பேராசிரியர் வையாபுரியாரின் காலக்கணிப்புகளை ஒருங்கு கண்டறிய வாய்ப்பாக 'இத் தொகுப்பு நூலைத் தாம் ஆக்கியுள்ளதன் நோக்கத்தையும் புலப்படுத்தியுள்ளார். பேராசிரியர் அவர்கள்பால் கொண்ட பேரீடுபாடே பேராசிரியர் பெருமாள் அவர்களுக்கு இந்நூலை ஆக்குதற்கு ஊக்கம் தந்துள்ளது என்பது தெளிவு. பேராசிரியர் பெருமாள் அவர்களின் ஆய்வுகளினால் பேராசிரியர் வையாபுரிப் பிள்ளையவர்களைப் பற்றி உண்மையான செய்திகள் பலவும் தமிழுலகத்திற்குத் தெரிய வாய்ப்பாகும். பேராசிரியர் பெருமாள் அவர்களின் ஆய்வுகள் மேன்மேலும் நன்கு சிறப்புடன் அமைவதாக.

தமிழ் இலக்கியங்களின் காலம் பற்றி வையாபுரியாரின் கணிப்பு.

தமிழ் இலக்கியங்களின் காலப் பாகுபாடு

1) முதல் சங்க காலம் கி. பி. 100—350

தொகைச் செய்யுட்கள், பத்துப்பாட்டில் பல

2) தொகை செய் காலம் கி. பி. 400—500

சங்கப் பாடல்களைத் தொகையாகத் தொகுத்த நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப் பத்து, அகம், புறம் என்பன.

3) பிற்சங்க காலம் கி. பி. 600—750

கலித்தொகை, பரிபாடல்

4) பக்திநூல் காலம் கி. பி. 600—900

தேவாரம், திவ்வியப் பிரபந்தம், திருமுருகாற்றுப் படை, திருவாசகம்

5) நீதிநூல் காலம் கி. பி. 600—850

திருக்குறள் முதலிய கீழ்க் கணக்கு நூற்கள்

6) முற்காவிய காலம் கி. பி. 750—1000

பஞ்ச காவியங்கள்

7) பிற்காவிய காலம் கி. பி. 1100—1300

பாரதம், ராமாயணம்

8) தத்துவ நூல்களின் காலம் கி. பி. 1000—1350

மெய்கண்ட தேவர், வைஷ்ணவப் பெரியார்கள்

9) வியாக்கியான காலம் கி. பி. 1200—1500

இளம் பூரணர், குணசாகரர், பேராசிரியர், பரிமேலழகர், அடியார்க்கு நல்லார், நச்சினார்க்கினியர்

10) புராண பிரபந்த காலம் கி. பி. 1500—1850

குமரகுருபரர், பிள்ளைப்பெருமாள் அய்யங்கார், சிவப்பிரகாசர், கந்தபுராணம், திருவிளையாடல் புராணம்

11) தற்காலம் கி. பி. 1850 —

இராமலிங்கர், நாவலர், சுந்தரம் பிள்ளை, பாரதி

தொகை நூல்கள்

எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆகிய இரண்டும் சங்க நூல்களாகும். எட்டுத்தொகை நூல்கள் நற்றிணை குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல் அகநானூறு, புறநானூறு ஆகியனவாம். பத்துப்பாட்டு நூற்கள் திருமுருகாற்றுப்படை, பொருநர் ஆற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக் காஞ்சி, நெடுநல்வாடை, பட்டினப்பாலை, குறிஞ்சிப்பாட்டு, மலை படுகடாம் ஆகியனவாம்.

எட்டுத்தொகை நூல்களின் தொகுப்பு வரிசை கீழ் வரும் நிலையில் அமைந்திருக்க வேண்டும்.

குறுந்தொகை 270 –ம் செய்யுளைப் பாண்டியன் பன்னாடு தந்தான் இயற்றியுள்ளான். நற்றிணையில் மாறன் வழுதி என்பான் இரண்டு செய்யுட்களை எழுதி உள்ளான். (பாடல் 98, 301) பன்னாடு தந்தானும் மாறன் வழுதியும் ஒன்று என்பதற்குச் சான்றுகள் உண்டு. நற்றிணையைத் தொகுப்பித்தான் பன்னாடு தந்த மாறன் வழுதி என்று கூறப்படுவது இதனை நன்கு விளக்கும். எனவே குறுந்தொகைச் செய்யுளை இயற்றிய மாறன் வழுதியே நற்றிணையையும் தொகுத்துள்ளதால் நற்றிணை குறுந்தொகை இரண்டும் சம காலத்தன எனக் கருதலாம்.

நற்றிணை குறுந்தொகை என்னும் இரு நூல்களின் அடிவரையறையைப் பார்க்கின்ற போது குறுந்தொகை முதலிலும் பின் நற்றிணையும் தொகுக்கப்பட்டன எனக் கொள்ளலாம்.

அகநானூற்றைத் தொகுப்பித்தவன் உக்கிரப் பெரு வழுதியாவான் அவன் இயற்றிய செய்யுட்கள் அகநானூற்றிலும் (பாடல் 26) நற்றிணையிலும் (பாடல் 98) காணப்படுகின்றன. எனவே அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை ஆகிய மூன்றும் ஏறத்தாழ ஒரே காலத்தன என்று கருதலாம்.

ஐங்குறுநூற்றைத் தொகுப்பித்தவன் யானைக்கட்சேய் மாந்திரம் சேரல் இரும்பொறை. அவன் மேலோருலகம் எய்திய செய்தியைப் புறநானூறு குறிக்கிறது (பாடல் 229) எனவே புறநானூறு தொகுக்கு முன்பே ஐங்குறுநூறு தொகுக்கப்பட்டிருக்க வேண்டும்.

ஓரேருழவன், கயமனர், காக்கைப்பாடினியார், நச்செள்ளையார், தும்பிசேர் கீரனர் ஆகிய புலவர்களின் பெயர்கள் குறுந்தொகையில் காணப்படுகின்றன. (பாடல்கள் 131, 9, 120, 392) இந்நூலில் வந்துள்ள இப்புலவர்களின் பெயர்கள் காரணம் பற்றி அமைந்தவை. ஆகவே இப்புலவர்களின் பாடல்கள் தான் முதலில் தொகுக்கப்பட்டிருக்க வேண்டும் எனக் கருதலாம். இப்புலவர்களின் பெயர்கள் புறநானூற்றிலும் வருகின்றன. (பாடல்கள்: 193, 254, 278, 249)

எனவே நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு ஆகிய நூல்களுக்கு பிற்பட்டது புறநானூறு.

ஐங்குறு நூற்றைத் தொகுப்பித்த யானைக்கட்சேய் மாந்தரம் சேரலுக்கு முற்பட்டவர் கபிலர். இவர் வடக்கிருந்து உயிர் நீத்த செய்தியைப் புறநானூறு கூறும், (பாடல் 236) ஐங்குறு நூற்றில் குறிஞ்சிப் பாட்டையும் பதிற்றுப் பத்தில் ஏழாம் பத்தையும் பாடியவர் கபிலர். எனவே புறநானூற்றுக்கு முன்பே பதிற்றுப்பத்து தொகுக்கப்பட்டிருக்க வேண்டும்.

ஆகவே தொகை நூல்களின் தொகுப்பு பின் வரும் வரிசையில் அமைந்திருக்க வேண்டும்.

1. குறுந்தொகை
2. நற்றிணை
3. அகநானூறு
4. ஐங்குறுநூறு
5. பதிற்றுப்பத்து
6. புறநானூறு

எஞ்சிய கலித்தொகையும் பரிபாடலும் பிற்பட்ட காலத்தன.

பத்துப்பாட்டு தொகுத்த காலமும் வரிசையும் பின் வருமாறு.

பொருநர் ஆற்றுப்படையும் பட்டினப்பாலையும் கரிகால் பெருவளத்தானைப் பற்றியன. பட்டினப்பாலையின் ஆசிரியர் முடத்தாமக் கண்ணியாரே பெரும்பாணாற்றுப்படையையும் எழுதி உள்ளார். ஆகவே பொருநர் ஆற்றுப்படை, பட்டினப்பாலை, பெரும்பாணாற்றுப்படை ஆகிய மூன்றும் சமகாலத்தன.

மதுரைக் காஞ்சியும் நெடுநல்வாடையும் தலையாலங் கானத்து நெடுஞ்செழியனைப் பற்றியன. நெடுநல்வாடையின் ஆசிரியர் நக்கீரர். மலைபடுகடாத்தின் பாட்டுடைத் தலைவனை நன்னன் சேய் நன்னனை மதுரைக் காஞ்சி குறிப்பிடுகிறது. (618-619) ஆகவே இம் மூன்று நூற்களும் ஒரே காலத்தன.

குறிஞ்சிப் பாட்டின் ஆசிரியரான கபிலரை நக்கீரர் "பலபுகழ் நல்லிசை வாய்மொழிக் கபிலன்" (அகம் 78) எனப் பாராட்டுகிறார். எனவே மேற்கூறிய மதுரைக் காஞ்சி நெடுநல்வாடை மலைபடுகடாம் ஆகிய நூல்களுக்கு முற்பட்டது குறிஞ்சிப் பாட்டு.

கரிகால் பெருவளத்தானின் தந்தை உருவப்பஃறேர் இளம் சேட் சென்னியைப் பரணர் பாடி உள்ளார். (புறம் 4) இவரது முதுமைக் காலத்தில் கபிலர் இளைஞராய் இருந்தார் என்பதைப் பதிற்றுப்பத்தில் இவர்கள் பாட்டுக்களின் வைப்பு முறையால் அறியலாம். எனவே கபிலரின் குறிஞ்சிப்பாட்டு கரிகாலன் காலத்தில் தோன்றியது எனக் கொள்ளலாம்.

ஆகவே முதலில் கூறிய பொருநர் ஆற்றுப்படை பெரும்பாணாற்றுப்படை, பட்டினப்பாலை ஆகிய மூன்று நூற்களின் காலத்தது குறிஞ்சிப் பாட்டு.

புறநானூறு 53-ம் பாடலில் யானைக்கட்சேய் மாந்தரம் சேரல் இரும்பொறை "கபிலன் இன்றுளன் ஆயின் நன்று மன்" என்று கூறுவான். இந்த இரும்பொறை தலையாலம் கானத்து செருவென்ற நெடுஞ்செழியன் காலத்தவன் (புறம் 17) ஆதலால் நெடுஞ்செழியனின் மதுரைக் காஞ்சி கபிலரின் குறிஞ்சிப்பாட்டுக்குப் பிற்பட்டது. முல்லைப் பாட்டு என்னும் பெயரமைதி குறிஞ்சிப்பாட்டை ஒத்திருப்பதால் அதுவும் குறிஞ்சிபபாட்டுக்குப் பிற்பட்டது

முல்லைப் பாட்டில் யவனரின் கைத்தொழில் பற்றியும் மிலேச்சரின் செயல் பற்றியும் ஒரு குறிப்பு உளது. (வரி 60-66) நெடுநல்வாடையிலும் யவனர், மிலேச்சர் பற்றிய செய்திகளைக் காணலாம் (வரி 31, 35, 101) யவனர் மிலேச்சர் பற்றிய செய்திகள் பிற சங்க நூல்களில் அருகியே காணப்படுகின்றன. இவ்விருநூல்களிலும் இச் செய்திகள் தொடர்போடு காணப்படுவதால் இந்நூற்கள் அடுத்தடுத்துத் தோன்றியன எனக் கருதலாம.

இரண்டு நூல்களிலும் ஒத்த கருத்துக்களும் ஒத்த தொடர்களும் காணப்படுகின்றன.

முல்லைப்பாட்டு வரி	8–10 —	நெடுநல்வாடை வரி	43
„ „	16 —	„ „	155

எனவே நெடுநல்வாடையை அடுத்து குறிஞ்சிப்பாட்டு தோன்றியிருக்கலாம்.

சிறுபாணாற்றுப்படை, கடை எழு வள்ளல்களைப் பற்றி இறந்த காலச் செய்தியாகப் பாடுகின்றது. (வரி 84-112) அதனால் இந்நூல் அவ்வள்ளல்களின் காலத்திற்குப்பின்னர் இயற்றப்பட்டிருக்க வேண்டும். அவ்வள்ளல்களின் சம

காலத்துப்புலவர்கள் பரணர், கபிலர், முடமோசியார் ஆகியோர். ஆகவே பத்துப்பாட்டின் இறுதியில் எழுதப்பட்டது சிறுபாணாற்றுப்படை.

திருமுருகாற்றுப்படை பாடிய நக்கீரரும் நெடுநல்வாடை நக்கீரரும் வேறானவர்கள். அதற்குச் சான்றுகள் பல உள.

ஆகவே பத்துப்பாட்டைக் காலமுறைப்படி பின்வருமாறு வரிசைப் படுத்தலாம்.

1. பொருநர் ஆற்றுப்படை
2. பெரும்பாணாற்றுப்படை
3. பட்டினப்பாலை
4. குறிஞ்சிப் பாட்டு
5. மலைபடுகடாம்
6. மதுரைக்காஞ்சி
7. நெடுநல்வாடை
8. முல்லைப்பாட்டு
9. சிறுபாணாற்றுப்படை
10. திருமுருகாற்றுப்படை.

இவற்றுள் சிறுபாணாற்றுப்படை முதல் எட்டு நூல்களுக்கும் 2 அல்லது 3 தலைமுறைகளுக்குப் பிற்பட்டது.

குறுந்தொகை :

குறுந்தொகை தொகுக்கப்பட்ட காலம் வேறு எழுதப்பட்ட காலம் வேறு.

1. குறுந்தொகைக்கு உரை எழுதிய பேராசிரியரின் காலம் கி. பி. 13-ம் நூற்றாண்டு. ஆகவே அதற்கு முன்பே குறுந்தொகை தொகுக்கப்பட்டு விட்டது.

2. வீரசோழிய உரையில் அளவால் தொகை குறுந்தொகை என வருகிறது. வீரசோழியம் கி. பி. 11-ம் நூற்றாண்டினது. எனவே அதற்கு முற்பட்டது குறுந்தொகை.

3. இறையனார் களவியல் உரையில் குறுந்தொகை என்னும் பெயர் வருகிறது. இவ்வுரை கி. பி. 7-ம் நூற்றாண்டில் எழுதப்பட்டாலும் அது கி. பி. 5-ம் நூற்றாண்டிலேயே உருவானது என்பதற்குச் சான்றுகள் உண்டு. ஆகவே குறுந்தொகை கி. பி. 5-ம் நூற்றாண்டுக்கு முன்பே தொகுக்கப்பட்டு விட்டது.

4. இறையனார் களவியல் உரையில் "உப்பூரிக்குடிக் கிழார் மகனாவான் உருத்திர சன்மனாவான் செய்தது இந் நூற்கு உரை என்பாரும் உளர்; அவர் செய்திலர்" என வருகிறது. இங்கு கூறப்பட்டுள்ள உருத்திர சன்மனே அகநானூற்றைத் தொகுத்தவன். எனவே அகநானூற்றைத் தொகுத்த காலமும் அகப்பொருள் உரை கண்ட காலமும் கி. பி. 5-ம் நூற்றாண்டுக்கு முன்பு என உணரலாம்.

5. குறுந்தொகையைத் தொகுத்தவன் பூரிக்கோ என்பான். இவன் உப்பூரிக்குடிக் கிழான் ஆகவோ அவன் மகனாகவோ இருக்கலாம். ஆதலால் குறுந்தொகை கி. பி. 4-ம் நூற்றாண்டில் தொகுக்கப்பட்டிருக்க வேண்டும்.

6. வெண்கோட்டு யானை சோணைபடியும்
பொன்மலி பாடலி பெறீஇயர் — குறும் 75

என தலைமகன் வரவுணர்த்திய பாணனை நோக்கி தலைமகள் கூறுகிறாள். இங்கு குறித்த பாடலி பாடலிபுத்திரமே. அசோகனுக்குப்பின் கிருஸ்துவப்த்தின் ஆரம்பகாலங்களில் பாடலியிருந்த நிலையை மேலைச்செய்யுள் குறிப்பதாகக் கொள்ளலாம். ஆகவே கி. பி. 1 அல்லது 2-ம் நூற்றாண்டில் குறுந்தொகைச் செய்யுட்கள் இயற்றப்பட்டிருக்க வேண்டும்.

நெடுநல்வாடை

நெடுநல்வாடையில் அந்தப்புரத்தில் அரசியிருக்கும் கட்டிலின் மேற்கட்டியில்

புதுவ தியன்ற மெழுகுசெல் படமிசைத்
திண்ணிலே மருப்பின் ஆடுதலையாக
விண்ணூர்பு திரிதரும் வீங்குசெலன் மண்டிலத்து
முரண்மிகு சிறப்பில் செல்வனொடு நிலையிய
ரோகிணி வரி 159-163

வரையப்பட்டுள்ளது.

மேற்காட்டிய அடிகளில் மனையமைப்பிற்குரிய வட மொழிப் பெயர்க்குறிப்புகள் வந்துள்ளன. இதில் மேஷ ராசியிலிருந்து தொடங்கி பன்னிரு ராசிகளிலும் சூரியன் செல்கின்றமை குறிக்கப்பட்டுள்ளது. கிரேக்கர்களிடமிருந்து ராசியைப் பற்றிய அறிவு சுமார் கி. பி. 200-ல் தமிழ் நாட்டிற்குப் புகுந்திருக்கலாம் என்பர் ஆய்வாளர். எனவே சுமார் கி. பி. 250-ல் நக்கீரர் நெடுநல்வாடையை இயற்றியிருக்கலாம்.

பரிபாடல் :

இந்நூலில் பிற்காலத்துக்குரிய சமயக் கொள்கைகள் வருகின்றன. பிருங்கலாதன் முதலியோரைப் பற்றிய பௌராணிகக் கதைகளும் அகலிகை கல்லுரு எய்திய வரலாறும் இந்நூலில் குறிக்கப்படுகின்றன. அகலிகை கல்லுருவானதை முதலில் காளிதாசரே குறிக்கிறார். எனவே பரிபாடல் சங்க காலத்திற்குப் பிற்பட்டது.

2. மல்லிகாமாலை, அமிர்தபானம், ஆராதனை, இரதிகாமன், சலதாரி, மகர குண்டலம் போன்ற வடசொற்களையும் வடமொழித் தொடர்களையும் இந்நூல் எடுத்தாளுகிறது.

3. குங்குமம் என்ற பெயரை இந்நூல் கையாளுகிறது. குங்குமம் காஷ்மீரத்தில் தோன்றியது. (அமர கோசம்) காளிதாசரே முதலில் இதைக் குறிக்கிறார்.

4. நான், கொடும்பாடு, மேம்பாடு, சேடி, தோழம், ஈதா, கில்லா, பாட்டியார், ஓட்டை முதலிய பிற்காலத் தமிழ்ச் சொற்களை இந்நூல் கையாளுகிறது.

5. அல்லால், சிறிதானும், மறுமுறையானும், கூறேல், வாரும் முதலிய பிற்கால வழக்குகளும் இந் நூலில் ஆளப்படுகின்றன.

6. அம்பாவாடல் முதலிய பிற்கால ஒழுகலாறுகள் இதில் குறிக்கப்பட்டுள்ளன.

7. நான் எனும் தன்மை ஒருமைப் பெயர் இந்நூலில் பயிலப் படுகிறது.

8. 11-ம் பாடலில் வரும் சோதிடக் குறிப்புகளை திவான்பகதூர் L. D. சுவாமிக்கண்ணு பிள்ளை இந்நூல் கி. பி. 634-ல் எழுதப்பட்டது என்பார்.

எனவே பரிபாடல் சுமார் கி. பி. 8-ம் நூற்றாண்டளவில் இயற்றப்பட்டிருக்க வேண்டும்.

கலித்தொகை

1. கலித்தொகையில் ஈங்கே தலைப்படுவன் (பாடல் 64) என 'அன்' ஈறு தன்மை ஒருமையில் வந்துள்ளது. இளம் பூரணரும் (தொல்: சொல் 200) நேமிநாத உரைகாரரும் (சொல் 39) இக்காலத்து அல் ஈறு அன் ஈறாகத் திரிந்து வழங்கும் என்பார். எனவே கலித்தொகை சங்க நூற்களுக்குப் பிற்பட்டது.

2. அல்லால் என்ற சொல் கலியில் பல இடங்களில் (15, 67, 82, 83, 88, 102, 109) வருகிறது. ஆல் என்னும் எச்ச ஈறு தொல்காப்பியத்தில் இல்லை. அது முதலில் தேவாரத்தில் (அப்பர்) காணப்படுகிறது. எனவே கலித்தொகை பிற்காலத்தது.

3. 'மல்' என்னும் விகுதி (பாடல் 1) 'ஏல்' என்னும் ஈறு (பாடல் 60) உயர்திணைப் பன்மையில் வரும் 'கள்' என்னும் விகுதி (பாடல் 149) போழ்து. ஆனல், உமக்கு முதலிய பிற்கால வழக்குகளும் கலித்தொகையில் வருகின்றன.

4. கலித்தொகை 38-ம் பாடலில் இராவணன் கைலை மலையைத் தூக்கிய செய்தி வருகிறது. உத்திர காண்டத்தில் வரும் இச்செய்தி பிற்காலத்தது. ஆகவே கலித்தொகையும் பிற்காலத்தது.

எனவே கலித்தொகை சங்க நூல்களின் காலத்திற்கு மிகவும் பிற்பட்டது.

திருமுருகாற்றுப் படை

1. அகநானூறு, குறுந்தொகை, நற்றிணை, புறநானூறு முதலிய நூல்களில் பாடிய நக்கீரர் வேறு. திருமுருகாற்றுப்படையில் பாடிய நக்கீரர் வேறு அதற்கு அந்நூல்களில் அகச்சான்றுகள் உள.

2. திருமுருகாற்றுப்படையில் 'முடிமார்' (வரி 89) என்பதனை ஆறனுருபு தொக்க பெயராகக் கொண்டு 'முடிப்பவருடைய' என உரை கூறினர் நச்சினர்க்கினியர். இது இலக்கணத்தோடு பொருந்துவது அன்று என்பதை தொல்காப்பியத்தால் உணரலாம் (தொல்வினை-10) சங்க இலக்கிய வழக்கும் இதற்கு மாருக உள்ளது.

3. இந்நூலில் "ஒன்பதிற்றிரட்டி உயிர்நிலை பெறீஇயர்" (வரி 128) என வரும் இடத்தில் பெறீஇயர்

என்பதற்குப் பெற்றவர் எனப் பொருள் கூறப்படுகிறது. உண்மையான பொருளும் அதுதான். ஆனல் 'பெறீஇயர்' என்றும் வாய்ப்பாடு எச்சமாகவும் வியங்கோளாகவும் சங்க நூல்களில் வருகின்றது. வேறு பொருள்களில் வந்ததாகத் தெரியவில்லை.

4. சங்க நக்கீரரும் முருகாற்றுப்படை நக்கீரரும் இலக்கண வழக்கில் மட்டும் மாறுபடவில்லை. இருவரின் மன உலகமும் வேருக உள்ளது.

சங்க நக்கீரருக்குத், தமிழகம் தம்மையொத்த புலவர்க்குப்பரிசில் வழங்கும் உலகமாகத் தோன்றியது. பரிசிலுக்காகக் குறுநில மன்னர்களையும் தெய்வங்களாக் கியவர் அவர். மகளிர் பொற்கலத்தில் ஏந்திக் கொடுக் கும் மதுவை உண்டு களித்தலை சிறந்த வாழ்வு என அரசர்க்கு அறிவுறுத்தியவர். அவரது உலகிற்கு மாறு பட்ட மனநிலை உடையவர் முருகாற்றுப்படை நக்கீரர். மறந்தும் பொருட்பரிசிலை அவர் வேண்டவில்லை.

5. முருகாற்றுப்படை இயற்றப்பட்ட காலத்தில் பௌராணிகச் செய்திகள் தமிழ் நாட்டில் பரவி விட்டன. சங்கத் தொகை நூல்களில் இவ்வழக்கு இல்லை.

6. முருகாற்றுப்படை 11-ம் திருமுறையில் சேர்க்கப் பட்டிருப்பது இந்நூல் பிற்காலத்தது என்பதை ஆதரிக் கின்றது.

எனவே முருகாற்றுப்படை நக்கீரர் சங்க நக்கீரருக் கும் பிற்பட்டவர்.

தொல்காப்பியம்

1. "ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்" என்பது பனம்பாரனுர் இயற்றிய பாயிரத்தில் வரும் ஓர் அடி.

பனம் பாரனுர் தொல்காப்பியரின் ஒருசாலை மாணுக்கர். ஐந்திரம் பாணினீயத்திற்கு முற்பட்டது. பாணினீயம் தோன்றியபின் ஐந்திரம் வழக்கொளிந்து விட்டது. ஆகவே தொல்காப்பியர் பாணினீயத்திற்கு முற்பட்டவர் என்பது பொதுப்படையான கருத்து (M. Sreenivasa Iyengar - Tamil Studies)

பாணினி தோன்றிய பிறகு ஐந்திரம் வழக்கொளிந்து விட்டது எனத் துணிய முடியாது. மேலும் ஐந்திரம் ஒரு தனிப்பட்ட இலக்கணமாக எப்பொழுதாவது இருந்த துண்டா என்பதும் ஐயப்பாட்டிற்கு இடமுயுள்ளது. பாணினி, பதஞ்சலி, காசிகாவிருத்தி ஆசிரியர் ஆகியோருள் ஒருவரேனும் ஐந்திரம் எனும் பெயரைக் குறிப்பிடவில்லை வடமொழி இலக்கணங்களை ஆராய்ந்த கீல்கார்ண் (Kielhorn) பெல்வெல்க்கர் (Belvalkar) ஆகிய இரு பேராசிரியர்களும் "ஐந்திரத்தில் கூறப்பட்ட பொருள்கள் பாணினீயத்திற்கு முற்பட்டதாயினும் ஐந்திரம் என்னும் பெயர் ஏற்பட்டது அதற்குப் பிற் காலத்தே" எனக்கருதுவர்.

பாணினீய முறையைத் தொல்காப்பியர் பயன்படுத் தாததற்குக் காரணம் பாணினீயமுறை வடமொழியோடு யாதொரு தொடர்புமற்ற பிறிதொரு மொழியின் இலக் கணத்தை அமைப்பதற்குச் சிறிதும் பயன்பட மாட்டாமை யால்தான். மேலும் தொல்காப்பியர் ஜைனர். ஆதலால் அவர் தம்மைப் போன்ற புறச்சமயிகள் கற்றுப் போற்றிய இலக்கணத்தைப் பின்பற்ற விரும்பி ஐந்திரத்தைப் போற்றியிருக்கலாம்.

பாணினீயத்தைத் தொல்காப்பியர் போற்றினுர் என் பதற்கும் சான்றுகள் உண்டு. ஆகவே தொல்காப்பியர் பாணினீக்குப் பிற்பட்டவர் எனலாம்.

2. தொல்காப்பியரின் ஒரு சூத்திரம் பதஞ்சலி சூத் திரத்தின் மொழிபெயர்ப்பு போல் உள்ளது.

அவைதாம்.

முன்மொழி நிலையிலும் பின்மொழி நிலையலும்
இருமொழி மேலும் ஒருங்குடன் நிலையலும்
அம்மொழி நிலையது அன்மொழி நிலையலும்
அந்நான்கு என்ப பொருள்நிலை மரபே

தொல். சொல் 419.

இதனைப் பதஞ்சலியார்.

இஹகஸ்சித் ஸமாஸ்ர்: பூர்வ பதார்த்த ப்ரதாந
க்ஸ்சித் உத்தர பதார்த்த ப்ரதாந
கஸ்சித் அந்ய பதார்த்த ப்ரதாந
கஸ்சித் உபய பதார்த்த ப்ரதாந

என்கிறார். இரண்டும் பொருளில் சிறிதும் வேறுபட வில்லை என்பது தெளிவு.

தொல்காப்பியா பதஞ்சலியாருக்குக் கடன்பட்டதற்கு வேறு சான்றும் உண்டு. எனவே பதஞ்சலியின் காலமான கி. மு. 150 க்குப் பிறபட்டவர் தொல்காப்பியர் என்பது உறுதி.

3. பூப்பின் புறப்பாடீராறு நாளும்
நீத்தகன்று உறையர் என்மனார் புலவர்

(பொருள் 185)

என்னும் தொல்காப்பியர் கருத்து மனுதர்ம சாஸ்திரத்தில் (111 46, 47) காணப்படுகிறது. இந்த ஸ்ம்ருதியின் காலத்திற்குப் பின்னெல்லை கி. பி. 200 என்பார் ஆசிரியர் கனே (P. V. Kane) எனவே தொல்காப்பியர் கி. பி. 200-க்குப் பிறபட்டவர்.

4. தொல்காப்பியர் 8 வகை மெய்ப்பாடுகளைக்கூறும் போது (மெய்ப்பாட்டியல் 3) 'என்ப' எனக் கூறுவார்.

எனவே இக்கருத்து பிறருக்குரியது என்பது தெளிவு. தொல்காப்பிய உரையாசிரியர் பேராசிரியர் இந்த எட்டு மெய்ப்பாடுகளுக்கும் உரிய வடமொழிப் பெயர்களைக் தருவார். இளம்பூரணர், "வியப்பெனினும் அத்புதம் எனினும் ஒக்கும்; காமம் எனினும் சிருங்காரம் எனினும் ஒக்கும்; உருத்திரம் எனினும் வெகுளி எனினும் ஒக்கும்" என்று எழுதுவார். ஆகவே மெய்ப்பாடு பற்றிய தொல்காப்பியரின் கருத்து வடமொழிக்குச் சொந்தம். வடமொழியில் முதலில் இதைக் கூறியவர் பரத முனிவர்.

ச்ருங்கார ஹாஸ்ய கருணா ரௌத்ர வீர பயாநகா
பீபத்ஸாத்புத் ஸம்ஞௌ சேத்ய நாட்யேரஸா ஸ்மருதா

இக்கருத்தையே தொல்காப்பியர் பின்பற்றியுள்ளார் என்பது வெளிப்படை. பரத முனிவரின் காலம் கி. பி. 4-ம் நூற்றாண்டு. எனவே கி. பி. 400 க்கும் பிற்பட்டவர் தொல்காப்பியர்.

5. தலைவனைப் பிரிந்த தலைவிக்கு பத்து அவத்தைகள் உண்டு எனத் தொல்காப்பியர் கூறுவார் (களவியல்-9) இச்சூத்திரததிலும் மொழிப எனக் கூறுவதால் இதுவும் பிறருடைய கருதது. வட நூலார் இவற்றைத்தச அவத்தைத் என்பர். இந்த அவத்தை வாத்ஸ்யானரது காமசூத்திரத்தில் ஐந்தாம் அதிகரணத்தில் முதல் அத்தியாயத்தில் காணப்படுகிறது. காமசூத்திரம் கி. பி. 4-ம் நூற்றூண்டினது என்பார் வின்டர்நீஸ் (Winterniz). எனவே தொல்காப்பியர் கி பி. 4-ம் நூற்றூண்டுக்கும் பிற்பட்டவர்.

6. "மறைந்த ஒழுக்கத்து ஓரையும் நாளும்" (களவியல் 45) என்னும் சூத்திரத்தில் வரும் ஓரை என்ற சொல் கிரேக்க மொழியிலிருந்து வடமொழிக்கு வந்து பின் தமிழுக்கு வந்தது. இச்சொல் கிரேக்க மொழியிலிருந்து வடமொழிக்கு வந்தது கி. பி. 4-ம் நூற்றூண்டில் என்பார் பெரிடேல் கீத்.

எனவே தொல்காப்பியர் கி. பி. 5-ம் நூற்றூண்டை ஒட்டி வாழ்ந்திருக்க வேண்டும்.

கீழ்க் கணக்கு நூல்கள்

பதினெண் கீழ்க்கணக்கு என்னும் வழக்கு மயிலை நாதராலும் (நன்-உரை-387) பேராசிரியராலும் (தொல்-பொருள் செய்-470, 547 உரை) குறிக்கப்பட்டுள்ளது. எனவே இவ்வழக்கு கி. பி. 13, 14-ம் நூற்றூண்டளவில் பிரசித்தமாயிருந்தது புலனுகும்.

கீழ்க்கணக்கு நூல்களைச் சங்க நூல்களோடு ஒப்ப வைத்து எண்ணும் வழக்கம் இருக்கிறது. கடைச் சங்க செய்யுட்களை இயற்றிய புலவர்களில் இருவர் பெயர்களே கீழ்க்கணக்கு நூல்களின் ஆசிரியர் பெயர் வரிசையில் காணப்படுகின்றன. அவ்விருவரும் கபிலர், பொய்கையார் என்பவர் ஆவர்.

கபிலர் பாரியின் நண்பர். சங்கப்பாடல்களில் அதிக எண்ணிக்கை பாடியவர் இவர். இன்னு நாற்பது பாடிய கபிலரினின்று வேருனவர். பாரியின் நண்பருக்கு மதுவும் மாமிசமும் உண்பதில் உடன்பாடு உண்டு. (புறம் 113, 119) இன்னு நாற்பது கபிலர் அவற்றை வெறுத்தவர் (பாடல் 34, 33) சங்கப்புலவர் கபிலர் அந்தணர் (புறம் 201) இன்னு நாற்பது கபிலர் 3 இடங்களில் அந்தணரைப் பற்றிக் கூறினுலும் அவை அந்தணரின் பெருமையைக் குறிப்பதாக இல்லை. மேலும் அவர் கபிலதேவர் என்றே அழைக்கப்படுகின்ருர்.

களவழி நாற்பது பாடிய பொய்கையாரும் சங்கநூல்களில் பாடிய பொய்கையாரும் வேருனவர்கள் என்பதற்குச் சான்று உண்டு. களவழி நாற்பது சோழன் செங்கணுனுக்கு சேரன் கணைக்கால் இரும்பொறைக்கும் நடந்த போரைப் பற்றியது. சோழன் புகழ் பாடுவது. சேரமான்

கணைக்கால் இரும்பொறையைப் பற்றி நற்றிணையிலும் புற நானூற்றிலும் பாடிய பொய்கையார் சோழனைப் பற்றிக் குறிப்பிடவில்லை. ஆகவே இரு பொய்கையார்களும் வேறானவர்.

தொல்காப்பியச் செய்யுளியல் 158-ம் சூத்திர உரையில் "பதினெண் கீழ்க் கணக்கினுள்ளும் முத்தொள்ளாயிரத்துள்ளும் ஆறடியில் ஏறாமல் செய்யுள் செய்தார் பிற்காலச் சான்றோரும் எனக் கொள்க" எனப் பேராசிரியர் எழுதுகின்றார். ஆகவே பதினெண் கீழ்க்கணக்கு செய்தவர்கள் பிற்காலத்துச் சான்றோர் என விளங்குகிறது. நச்சினார்க்கினியரும் இதே கருத்தைக் கூறுகிறார். (தொல் சொல் 175) ஆகவே கீழ்க்கணக்கு நூற்களை எழுதியவர்கள் சங்கத்துச் சான்றோர்க்குப் பிற்பட்டவர் என்பது தெளிவாக அறியக் கிடக்கின்றது

ஆகவே கீழ்கணக்கு நூல்களை ஆக்கியவர்கள் யாரும் சங்கப்புலவர் வரிசையில் இல்லாததாலும் பொய்கையார் கபிலர் ஆகியோர் சங்கப் புலவர்களினின்றும் வேறுபட்டவர்கள் ஆதலாலும் கீழ்க்கணக்கு நூற்கள் சங்க காலத்துக்குப் பிற்பட்டவையாகும்.

சங்ககாலத்துச் செய்திகள் பலவற்றைக் கீழ்க்கணக்கு நூலான பழமொழி நானூறு பண்டைக்காலத்தில் நிகழ்ந்தனவாகக் குறிப்பிடுகின்றது. உதாரணமாக பேகன் மயிலுக்குப் போர்வை அளித்த நிகழ்ச்சியைப் பழமொழி நானூறு குறிப்பிடுகின்றது. (பாடல் 361) இதன் பழைய உரையில் இந்நிகழ்ச்சியைப் பண்டு கொடுத்தாரை என குறிப்பிடுவதைக் காணலாம். ஆகவே மேற்கண்ட சங்க நிகழ்ச்சி பழையது, பழமொழி நானூறு பிற்காலத்தது என விளங்கும்,

மநுநீதி கண்ட சோழனின் சரித்திரம் சங்க நூல்களில் காணப்படவில்லை. இச் சரித்திரம் பழமொழியில்

வருகிறது. (93) இச்செய்யுளில் "மேலைக்கறவைக் கன்ஹார்ந்தானைத் தந்தையும் உணர்ந்தான்" என்னும் வரியில் மேலை என்பதற்கு முன்பு ஒரு காலத்தில் என உரை எழுதுவார். இதனால் சங்ககாலத்திற்குப் பிற்பட்ட வரலாறு கூட மிக முற்பட்ட காலத்துச் செய்தியாக பழமொழி அறிவிக்கின்றது.

கீழ்க்கணக்கு நூல்கள் பலவற்றில் பிற்காலத் தமிழ் வழக்குகள் காணப்படுகின்றன. உன்னை (திணைமொழி-ஐம்பது 36) ஆட்டை, போது (திணை மாலை 141, 153) மரிசாதி (பழமொழி 118) போன்றன.

எனவே கீழ்க்கணக்கு நூல்கள் மிகவும் பிற்பட்டன எனலாம்.

திருக்குறள் :

1. வள்ளுவனால் கடைச்சங்கம் அழிவுற்றது என்பது கர்ண பரம்பரைக் கதை. அதனால் கடைச் சங்ககாலத்திற்குப் பிற்பட்டவர் வள்ளுவர்.

2. வள்ளுவர் சங்க நூல் கருத்துக்கள் பலவற்றை எடுத்தாள்கிறார்.

நற்றிணை 32, 308 — குறள் 791, 660
புறம் 278, 371 — குறள் 69, 371

சங்க நூற்கள் தொகுக்கப்பட்ட காலம் கி. பி. 5-ம் நூற்றாண்டு. வள்ளுவர் அதற்கும் பிற்பட்டவர்.

3. அருகிய சங்க வழக்குகள் குறளில் பெருகி வருகின்றன. வினையடி முன்னிலை ஏவல் ஆதல்: ஓம்பு, உரை; விடு (குறள் 1149, 1151. 1247)

ஐ, ஆய் முன்னிலை ஏவல் விகுதி (1301)
கள் பலவின் பால் விகுதி (271; 347, 1045, 1100)
வி, பி பிறவினை விகுதி (1233, 938)

சங்க இலக்கியங்களில் பயின்று வராமல் பிற்பட்ட தேவாரம் முதலிய பக்தி நூல்களில் காணப்படும் புதிய சொற்களும் புதிய சொல் வடிவங்களும், புது வழக்கு களும், புது விகுதிகளும். புதிய இடைநிலைகளும், புதிய உருபுகளும், புதிய அசைநிலைகளும், புதிய விகாரங்களும் திருக்குறளில் காணப்படுகின்றன.

புதிய சொற்கள் :

ஒப்பாரி (குறள் 1071) பட்டி (1074) ஆராய்-தல் (584, 586) பொச்சாத்-தல் (199,285) கழகம் (985) அமைச்சு (381)

புதிய சொல் வடிவங்கள் :

கள்ளம் (1275) போழ்து (412,930) வழுத்தினள் (1317)

புதிய வழக்குகள் :

உணரா (1172) செய்யா (203) இருந்தோமா (1312)

புது விகுதிகள் :

கள் (உயர் திணைப் பன்மை) பூரியர்கள் (919)
ஆல் (வினை எச்ச விகுதி) அற்றால் (943)
ஏல் (வினை எச்ச விகுதி) உண்டேல் (368)
கடை (வினை எச்ச விகுதி) 53, 230, 315
மல் (எதிர்மறை எச்ச விகுதி) (1024, 101, 313)

புதிய இடை நிலைகள் :

கில் (ஆற்றல் உணர்த்துவது) 515, 1170
ஆநின்று (நிகழ் காலம்) 1157

புதிய உருபுகள்

மாடு (ஏழன் சொல்லுருபு) 5, 188, 211
பொருட்டு (நான்கன் சொல்லுருபு) 81, 256

புதிய அசைகள்

ஆம் (976, 1270) இருந்து (530) இரப்பர் (804)

புதிய விகாரங்கள்

பெற்றத்தால் (524)

4. திருக்குறளில் வரும் சில தொடர்கள் கருத்துக்கள் சொற்றொடர்கள் முதலியன பிற கீழ்க்கணக்கு நூல்களில் வருவனவற்றோடு பெரிதும் ஒற்றுமை உடையனவாம். சங்க நூல் வழக்கில் இவை காணப்படாமையும் அறியத்தக்கது.

குறள் 104	— நாலடி 344.	குறள் 575	திரிகடு 53
„ 676	— இனியவை 18.	„ 801	இன்னா 18
„ 1251	ஐந்திணை 10:	„ 1293	பழமொழி 134

இக்கருத்து திருக்குறள் சங்க நூற்களுக்கு பிற்பட்டது; கீழ்க்கணக்கு நூற்களின் சமகாலத்தது என்பதை உறுதிப் படுத்துகிறது.

5. சுமார் 750 மூலச்சொற்கள் உள்ள திருக்குறளில் 150 வடசொற்களும் பிராகரதச் சொற்களும் உள்ளன. இத் தனிச் சொற்களேயன்றி ஆதிபகவன், ஒருவந்தம் போன்ற இருமொழித் தொடர்களும் குறளில் வந்துள்ளன. இவ்வாறு வடமொழியைப் பயன்படுத்தும் மனப்பான்மை நாயன்மார் காலத்தில் தான் பரந்தது. கி. பி. 600–ல் திருக்குறள் தோன்றியது என்பதை இது வலுப்படுத்தும்.

6. இரப்பன் (1067) உள்ளுவன் (1125) என்னும் இரு சொற்களையும் எதிர்காலம் பற்றிய தன்மை ஒருமை யில் வள்ளுவன் கையாளுகிறார். இதற்கு விகுதியாக அல் என்பதனையே தொல்காப்பியர் கூறுகிறார். (தொல் சொல் 200) பிற்காலத்தில் அல்லீறு அன்னீறாக வழங்கத் தலைப் பட்டது. இளம்பூரணர் (தொல் சொல் 200 உரை) இப் பொழுது இதனை உண்பன், தின்பன் என அன்னீறாக வழங்குப என எழுதினர். நேமிநாத நூலார் (சொல் 39) அதன் உரையில் ‘இக்காலத்து அன்னும் நடக்கவும் பெறும், என்பார். இக்கூற்றுக்களால் எதிர்காலம் குறித்து

தன்மை ஒருமையில் அன் விகுதி பெறுதல் பிற்பட்ட வழக்கு என்பதை உணரலாம்.

7. 'அல்லால்', 'ஆனல்' என்னும் வினை எச்சங்களை வள்ளுவர் கையாளுகிறார். இவ்விரு வழக்குகளும் சங்க நூல் வழக்கில் இல்லை. குறளில் இவை 12 இடங்களில் வருகின்றன (7, 8, 16 ... ..) இவ்வழக்கு பிற்பட்டது. அப்பர், சுந்தரர் போன்றோர் இவ்வழக்கைக் குறித்துள்ளனர். கலித்தொகையிலும இவ்வழக்கு வருகின்றது. (15, 83, 102) ஆகவே கலித்தொகை, அப்பர் தேவாரம் இவற்றின் காலமான கி. பி. 6–ம் நூற்றாண்டை ஒட்டி குறள் எழுதப்பட்டிருக்கலாம். தொல்காப்பியத்தில் இல்லாத மல் ஈறு கலித்தொகையில் (பாடல் 1) வருகிறது வள்ளுவரும் இதைக் கையாளுகிறார் (1024, 101, 303) ஆகவே முன் கூறிய கருத்து மேலும் உறுதியாகிறது.

8. வடசொற்களை மட்டுமன்றி வடமொழிக் கருத்துக்களையும் வள்ளுவர் எடுத்தாளுகிறார்.

நால்வகை ஆசரமங்களை

இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்

நல்லாற்றன் நின்ற துணை — என்று கூறுவார்.

பஞ்சமா யக்ஞங்களையும் (பாடல் 43) சாங்கியநூல் கருத்துக்களையும் (27) அவித்தை பிறப்பதற்குக் 'காரணம்' என்பதனையும் (358) குறள் குறிப்பிடுகின்றது. இதனல் வள்ளுவரின் காலம் கி. பி. 600 என்பதில் தவறில்லை.

9. மனுஸ்மிருதியில் "தொடுக்கருவி கொண்டு பூமியைத் தோண்டுவதால் ஒருவன் நீர் பெறுதல் போலக் குருவினிடமிருந்து ஒருவன் வித்தையை அவர்க்குச் சேவை புரிந்து பெறுகிறான் என்று வரும் கருத்து குறளில்

தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு (396)

என வருகிறது. மனுவின் வேறு கருத்துக்களையும் வள்ளுவர் கையாளுகிறார்.

(மனு III 78 — குறள் 41, 47
மனு III 142 — „ 406)

10. அரசர்க்குரிய அங்கங்கள் ஏழு என்பது அர்த்த சாஸ்திரக் கொள்கை. இதை

படைகுடிகூழ் அமைச்சு நட்புஅரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு (381)

என்பார் வள்ளுவர். சாணக்கியரின் வேறு கருத்துக்களையும் வள்ளுவர் கையாளுகிறார். (அர்த்த சாஸ்திரம் அதிகரணம் 1 அத்தியாயம் 10 — குறள் 501)

11. பொருட்பாலில் அங்கவியலின் இறுதியில் உள்ள மருந்து என்னும் அதிகாரம் வடமொழியில் உள்ள ஆயுர் வேத நூல்களைப் பின்பற்றியதாகும். பரிமேலழகரின் உரையும் (பாடல் 950) இதை உறுதிப்படுத்தும்,

12. வாத்ஸ்யாயனின் காமசூத்திரக் கருத்து (1-2-11)

கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று அறியும்
ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே உள

என வருவதைக் காணலாம்.

மேற்கூறிய வடமொழி நூல்களுள் சாணக்கியரின் அர்த்த சாஸ்திரத்தின் காலம் சுமார் கி. பி. 300 என்றும், வாத்ஸ்யாயனரின் காலம் கி. பி. 400 என்றும் பெரிடேல் கீத் (History of Sanskrit Literature) கூறுவார். எனவே வள்ளுவரின் காலம் இவர்களுக்குப் பிற்பட்டு கிபி 600 அளவில் தோன்றியது எனலாம்.

நான்மணிக் கடிகை :

இந்நூல் திருக்குறளைச் சில இடங்களில் பின்பற்று கிறது. உதாரணமாக

இன்மையின் இன்னாத தில்லை இலமென்னும்
வன்மையின் வன் பட்டதில் (நான்மணி 31)

என்ற செய்யுள்

இன்மையின் இன்னாத தியாதெனின் இன்மையின்
இன்மையே இன்னா தது (,, 1041)

என்ற திருக்குறளையும்

இன்மை இடும்பை இரந்து தீர் வாமென்றும்
வன்மையின் வன் பட்டதில்

என்னும் திருக்குறளையும் உட்கொண்டது. எனவே இந்நூல் திருககுறளுக்குப் பிற்பட்டது. இது கி பி 7-ம் நூற்றாண்டினது எனலாம்.

ஆசாரக்கோவை :

1, சுக்கிரஸ்ம்ருதி எனப்படும் உ ஸ ன ஸ் ஸ ம் ஹிதைக்கும் ஆசாரக்கோவைக்கும் கருத்தொற்றுமைகள் பல காணப்படுகின்றன.

ஆசார	20	உஸனஸ்	I 62 — 93
,,	18	,,	I 63 — 64
,,	16	,,	I 30 — 31
,,	32	,,	II 36 — 38
,,	33	,,	II 34

மனுவின் கருத்துக்களும் ஆசாரக்கோவையில் வருகின்றன

ஆசாரக் 65 — மனு II 215

2. சுக்கிரஸ்ம்ருதியின் காலம் கி பி. 600 என்பர். எனவே அதற்குப் பிற்பட்டது ஆசாரக்கோவை.

3. ஆசாரக்கோவையின் 19-ம் பாடலின் கருத்து லகுசாதாபத்திலும், லகு அத்திரி ஸ்ம்ருதியிலும் காணப்படுகிறது. இந்த ஸ்ம்ருதிகளின் காலம் கி. பி 750 ஆக இருக்கலாம் என்பர். தமிழ் நாட்டில் இவை பரவி மொழி பெயர்க்கப்பட 50 ஆண்டுகள் ஆயிருக்கும் என்று கணக்கிட்டால் ஆசாரக்கோவை கி. பி. 820-ல் எழுதப்பட்டது எனக் கொள்ளலாம்.

ஏலாதி

துவாதச புத்திரர்கள் எனப் பிரபலமாய் வடமொழியில் வழங்கப்பட்டவர்களின் பெயர்கள் ஏலாதியில் முறையே கொடுக்கப்பட்டுளளன (பாடல் 30) இப்பெயர்கள் ஆரிய சமுதாயத்தின் பழக்க வழக்கங்களை அடிப்படையாகக் கொண்டவை. அப்பழக்க வழக்கங்கள், மீது கட்டப்பட்ட பிதுரார்ஜித உரிமை, நியதியை நோக்கமாகக் கொண்டது. ஆரியர்க்கே தனியாக அமைந்த உரிமை நியதியைத் தமிழ் நாட்டினர் ஏற்றுக்கொள்ள பிற்காலமே உகந்ததாய் இருந்தது. எனவே இந்நூல் கி. பி. 9-ம் நூற்றுண்டின் முற்பகுதியில் தோன்றியது எனலாம்.

களவழி நாற்பது

களவழி நாற்பது கொண்டவன் தஞ்சை விசயாலயன் எனக் குலோத்துங்கச் சோழன் உலாவின் பழைய உரை கூறுகிறது. செங்கணன், கணைக்காலிரும் பொறை ஆகிய இருவரைப்பற்றிய வரலாறுகளெல்லாம் ஒன்றுக்கொன்று முரணாயிருக்கின்றன. விசயாலயன் காலம் கி. பி. 850 ஆதலால் களவழி நாற்பது இக்காலத்திலேயே இயற்றப்பட்டிருக்க வேண்டும்.

பெருந்தேவனார் பாரதம்

சங்க இலக்கியங்களில் கடவுள் வாழ்த்துப் பாடிய பெருந்தேவனார் நந்திக்கலம்பகம், பாரத வெண்பா போன்ற நூல்களை இயற்றியவரல்லர்.

சின்னமனூர் செப்பேட்டில் "மாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரி சங்கம் வைத்தும்" என்று வருகிறது. இத்தொடர் கி. பி. 7-ம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் வாழ்ந்த அரிகேசரி பராங்குசனைக் குறிக்கும். இதில் காணும் பாரதத்தை இயற்றியவரே பெருந்தேவனார். எனவே இவர் கி. பி. 7-ம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் எனலாம்.

பெருங்கதை :

பைசாச மொழியில் குணாட்டியர் என்பவர் செய்த பிருகத் கதையைக் கங்க அரசனான துர்விநீதன் வடமொழியில் மொழி பெயர்த்து இயற்றினான் என்பர். துர்விநீதனின் மொழிபெயர்ப்பே தமிழ்ப் பெருங்கதையின் மூலமென்று கருதப்படுகிறது. இவ்வரசனின் ஆட்சி ஆரம்பம் கி. பி. 6-ம் நூற்றாண்டின் கடைசிப் பகுதி. இவன் மொழி பெயர்த்த காலம் கி. பி. 600 எனக்கொள்ளலாம்.

இம்மொழிபெயர்ப்பு, பிரச்சாரம் அடைந்த பிறகே அதன் தமிழ் வடிவம் வந்திருக்க வேண்டும்.

பெருங்கதையில் "நான்" "இப்படி" என்னும் பிற்கால வழக்குகள் (3-14-251) (3-27-116) வருகின்றன. திருக்குறளின் கருத்துக்களும் சொற்களும் அப்படியே வருகின்றன. (பெருங்-5-7-148—குறள் 783) நாலடியாரையும் பெருங்கதை பின்பற்றுகிறது. எனவே பெருங்கதை சுமார் கி. பி. 750-ல் இயற்றப்பட்டிருக்க வேண்டும்.

சிலப்பதிகாரம்

சிலப்பதிகாரம் தொன்று தொட்டு வழங்கிய கதை. இளங்கோ அடிகள் காலத்தில் அது நிகழவில்லை. கற்பவரின் உள்ளம் அது உண்மை நிகழ்ச்சி என நம்பும்படி செய்திகளை அமைத்து தம்மையும் அதில் ஈடுபடுத்தி உள்ளார் அடிகள்.

அரும்பத உரைகாரர் இதை கதை என்றே வழங்கி உள்ளார். நச்சினார்க்கினியர் தொன்மை என்பதற்கு விளக்கம் சொல்லும் போது சிலப்பதிகாரத்தையும் உதாரணமாகச் சொல்லுவார்.

சிலப்பதிகாரம் முற்பட்ட காலத்தில் வழங்கிய கதை என்பதற்கு இரண்டு சான்றுகள் உள.

திருமாஉண்ணி என்பவள், தன்னிடம் அன்பின்றி தனக்கு அயலான் போலாகிவிட்ட தன் காதலனைப் பற்றிக் கவலை கொண்டு வருந்தினள் என்றும் அவள் தனது ஒரு முலையைத் திருகி எறிந்து வேங்கை மரத்தின் கீழ் நின்றாள் எனவும் நற்றிணை கூறும் (நற் 216)

பிறிதொருசான்று யாப்பருங்கல விருத்தியில் உள்ளது. ஒருத்தி தன் கணவன் கொலையுண்டு கிடந்த நிலை கண்டு பாடியதான வெண்பா அது.

கண்டகம் பற்றிக் கடக மணி துளங்க
ஒண்செங் குருதியுள் ஓ ஓ கிடப்பதே - கெண்டிக்
கெழுதகைமை யில்லேன் கிடந்தூடப் பன்னாள்
அழுத கண்ணீர் துடைத்த கை.

விருத்தி உரைகாரர் இதனைப் பத்தினிச் செய்யுள் என்று கூறுவார்.

இவ்விரு செய்திகளாலும் அடிகளின் சமகாலத்து நிகழ்ந்த உண்மைச் செய்திகளை அவர் காவியமாக அமைக்கவில்லை என்பது தெரிகிறது.

சேரன் செங்குட்டுவனுக்கு இளங்கோ என்னும் தம்பி இருந்ததாக புலப்படவில்லை. பதிற்றுப்பத்தில் சேரர் பரம்பரை பற்றிய விளக்கம் காணப்படுகிறது. அதில் ஐந்தாம் பத்து செங்குட்டுவனைப் பற்றியது. அவனுக்குத் தம்பி ஒருவன் உண்டென்ற வரலாறு அந்நூலில் இல்லை. மணிமேகலையிலும் இல்லை.

இளங்கோ பாடியதாக ஒரு பாடல்கூட தொகை நூல்களுள் இல்லை. ஆதலால் இவர் சங்கப் புலவர் அல்லர். இவரது சமகாலத்தவரான மணிமேகலை ஆசிரியர் மதுரைக் கூலவாணிகன் சாத்தனார் வேறு சங்க சீத்தலைச் சாத்தனார் வேறு. சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் சீத்தலைச் சாத்தன் என்னும் பெயர் காணப்படவில்லை. அரும்பத உரையாசிரியரும் அடியார்க்கு நல்லாரும் சிலப்பதிகாரத்தைக் கேட்டவன் சீத்தலைச் சாத்தன் என்று கூறவில்லை.

இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனுக்கு உற்றதுணையாய் கோவலன் என்பான் இருந்தான். அவனுக்கு 8 தலைமுறைக்குப் பின் வந்தவனே சிலம்பு கோவலன் என மணிமேகலை கூறும் (28-103) ஆதலால் செங்குட்டுவனின் காலத்திற்குப் பிறகு 8 தலைமுறை கழிந்து வாழ்ந்தவர் சாத்தானர் என்பது விளங்கும். ஆகவே சாத்தனரின் காலத்தவரான இளங்கோவடிகளும் செங்குட்டுவனுக்கு 8 தலைமுறைகளுக்குப் பிந்தியவர் என்பது வெளிப்படை.

மணிமேகலை ஆசிரியர் "கோவலனும் கண்ணகியும் கபிலவஸ்துவில் புத்ததேவன் அவதரித்துச் செய்யும் தரும உபதேசத்தைக் கேட்டு வீடு அடைவார்கள் என மாசாத்துவான் உரைப்பதாகக கூறுவார், (28—141 முதல் 146) இதை உண்மையாகக் கொண்டால் கோவலனும் கண்ணகியும் கி. மு. 650-க்கு முற்பட்டவர் எனக் கருதல் வேண்டும். ஆய்வாளர் இக்கருத்தை ஏற்க மாட்டார்.

மணிமேகலை மீது காதல் கொண்ட உதயகுமரன் சோழன் கரிகாலனின் வழி வந்தவன் என மணிமேகலை

கூறும். (4—107—110) உதயகுமாரனின் தந்தை நெடுமுடிக்கிள்ளி ஆவான். கரிகாலனின் அவையில் மாதவி அரங்கேறினாள் என்பதைச் சிலப்பதிகாரம் கூறுகிறது. (3—11) எனவே நெடுமுடிக்கிள்ளி வாழ்ந்த காலத்திற்குச் சில ஆண்டுகள் முன்பு நடந்த கதையை இருபுலவர்களும் தம்காலத்தில் பாடினர் என்பதை உணரலாம்.

இளங்கோவடிகள் தம் காலத்து நிகழ்ச்சியைத் தம் நூல் பொருளாகக் கொள்ளவில்லை என்பதற்குச் சிலப்பதிகாரத்தில் வரும் இயற்கை இறந்த நிகழ்ச்சிகள் சான்று பகரும். கவிஞன் தான் கேட்ட கர்ணபரம்பரைக் கதையில் தான் இத்தனை இயற்கை இறந்த நிகழ்ச்சியைக் கூறமுடியும்.

சிலப்பதிகாரத்தின் காலத்தை அறிய அதன் மொழி நடை இலக்கண வழக்கு ஆகியன பெரிதும் உதவும்.

1. எதிர்காலம் குறிக்கும் தன்மை ஒருமை விகுதியாக அல் வரும் என தொல்காப்பியர் கூறுவார். (சொல் 200) பிற்காலத்தில் அல் ஈறு அன் ஈறாகத் தலைப்பட்டது. இளம்பூரணர் "இப்போது இதனை (அல்) உண்பன், தின்பன் என அன் ஈறாக வழங்குப" என எழுதினார். (சொல் 200) நேமிநாத உரையில் (சொல் 39) "இக்காலத்து அல்வினை அன்னாய் நடக்கவும் பெறும்'' என வருகிறது. எனவே அன் ஈறு பிற்கால வழக்கு எனத் தெளிவாகிறது.

சிலப்பதிகாரத்தில் அன் ஈறு பல இடங்களில் வரும். அறிகுவன் (பதிகம்) வருவன் (16-92-93) உறுவன், காண்பன், கேட்பன் (19 - 56, 10, 82)

2. தொல்காப்பியர் நீர் என்னும் முன்னிலைச் சொல் வழக்கைக் குறிப்பிடவில்லை, சங்கப் பாடல்களிலும் நீர் வழக்கு பெரும்பாலும் இல்லை.

நீர் வழக்கு சிலப்பதிகாரத்தில் பல இடங்களில் வருகிறது.

அடிகள் நீரே (பதிகம்) நீர் கழிதற்கு (X53)
அடிகள் நீரே (X62) நீர் துணியின் (XI 74)
கூடற்காவதம் கூறுமின் நீரென (XIII 114)

இவ்வழக்கு சங்கநூல்களில் கலித்தொகையில் வருகிறது. (5, 6) ஆயினும் அது மிக அருகியே உள்ளது. பெருவழக்காய் வருதல் பிற்கால வழக்கு. சிலம்பில் பெருகி வந்துள்ளது.

3. முன்னிலைப் பன்மையைப் போலவே தன்மைப் பன்மையாகிய யாங்கள் என்பதும் கடைச் சங்க நூல்களில் இல்லை. சிலப்பதிகாரத்தில் அது வருகிறது (XI 61)

4. நான் என்னும் தன்மை ஒருமை தொல்காப்பியத்திலும் சங்க நூல்களிலும் இல்லை. நன்னூலார் இவ்வழக்கு பற்றி கூறுவார் (பெயரியல் 28) ஆனல் சிலப்பதிகாரத்தில் வாழ்த்துக் காதையில் ''தொடிவளைத் தோழிக்குத் தோழி நானா கண்டேன்" என வருகிறது. இதற்கு வேறு பல இடங்களிலிருந்தும் சான்று காட்ட முடியும்.

5. மணிமேகலை சிலப்பதிகாரம் ஆகிய இரு நூல்களிலும் மிகப் பிற்பட்ட காலத்து சொற்கள் பல வருகின்றன.

இந்த, அந்த, நாள், நீர், வார்த்தை, பட்டாங்கு,
குடும்பி, மார்க்கம், மைத்துனன், உன்னை.

இச் சொற்கள் தேவாரம் திருவாசகம் போன்ற நூல்களில் அதிகம் காணப்படுகின்றன. இவை சங்க நூல்களுக்கு உரியவையல்ல.

6. சிலப்பதிகாரத்தில் பயின்று வந்துள்ள வடசொற்களும் தொடர்களும் பிற்பட்ட காலத்தில் தமிழில் புகுந்தவை (10-177-186) சிலம்பும் பிற்பட்ட காலத்தது என்பதை இம் மொழிக்கலப்பு உணர்த்தும்.

7) சிலப்பதிகாரத்தில் வரும் சுருங்கை (14-65) என்னும் சொல் கிரேக்க மொழியிலிருந்து வடமொழி சில்ப சாத்திரங்களில் புகுந்து பின் தமிழ் மொழிக்கு வந்தது. இச்சொல் பிற்சங்க நூலாகிய பரிபாடலிலும் வந்துள்ளது. கி. பி. 800-க்குச் சற்று முன் இச் சொல் தமிழ் வழக்கில் புகுந்திருக்க வேண்டும். எனவே சிலப்பதிகாரம் அந்தக் காலகட்டத்தைச் சார்ந்தது.

8) இந்நூலின் அரங்கேற்றுக்காதை பெரும்பாலும் பரத சாஸ்திரத்தைத் தழுவியது. இந்த சாஸ்திரம் கி. பி. 300 அளவில் எழுதப்பட்டிருக்க வேண்டும் என்பார் பெரிடேல் கீத். எனவே கி.பி. 300-க்குப் பிற்பட்டது சிலப்பதிகாரம்.

9. அடைக்கலக் காதையில் (54-74) பிராமணியும் கீரிப்பிள்ளையும் என்னும் கதை வருகிறது. இக்கதையில் வரும் பிராமணிக்குக் கோவலன் பொருள் கொடுத்து [illegible] னன் என அடிகள் கூறுவார். இச் செய்தியே சில[illegible]காரம் இளங்கோ அடிகள் காலத்தில் நிகழவில்லை என[illegible]பதற்குச் சான்று. காரணம், இக்கதையின் மூலமான [illegible] மொழி பஞ்சதந்திரம் தென்னாட்டில் வந்து வழங்கி[illegible] காலம் கி. பி. 500-க்கு முற்பட்டதன்று என்று கூறு[illegible] பெரிடேல் கீத். எனவே கி. பி. 500-க்குப் பிற்பட்ட[illegible]ம்பு.

10. பழந்தமிழ் நூல்களைப் பல இடங்க[illegible]டுத்தாள்கிறது சிலம்பு.

நான்மணிக் கடிகையில் வரும் ஒரு கருத்து ([illegible] 84) வழக்குரைகாதையில் வருகிறது, (இறுதி [illegible]) எனவே நான்மணிக் கடிகையின் காலமான கி.பி. [illegible]-க்குப் பிற்பட்டது சிலம்பு.

11. பழமொழி நானூற்றில் வரும் ஒரு கருத்து (பாடல் 130) வஞ்சினமாலையில் (3-4) அப்படியே வருகிற[illegible]. மனுநீதிச் சோழனின் கதையைச் சிலப்பதிகாரம் 3 இ[illegible]ங்களில்

எடுத்தாள்கிறது. இக்கதை முதன் முதலாக மகாவம்சத்தில் வருகிறது. இந்நூலின் காலம் கி. பி: 5-ம் நூற்றுண்டின் இறுதி என்பர். இக்கதையைப் பழமொழி நானூறும் எடுத்தாளும். பழமொழி, இக்கதையைக் கூறுவதற்குப் பயன்படுத்திய சொற்களையே சிலப்பதிகாரம் எடுத்தாள்வதால் பழமொழியின் காலமான கி. பி. 650-க்குப் பிற்பட்டது சிலப்பதிகாரம்.

12. வஞ்சினமாலையில் "பார்ப்பார் அறவோர் பசு பத்தினிப் பெண்டிர் மூத்தோர் குழவி எனும் இவரைக் கைவிட்டு" என வரும் அடிகள் ஆசாரக்கோவையில் "பார்ப்பார் தவரே சுமந்தார் பிணிப்பட்டார் மூத்தார் இளையார் பசு பெண்டிர் என்றிவர்கட்கு" என்னும் அடிகளைப் பின்பற்றியது எனலாம். ஆகவே ஆசாரக் கோவையின் காலமான கி. பி. 750-க்கும் பிற்பட்டது சிலப்பதிகாரம்.

13. பத்தினிப் பெண்டிர் அறுவரைக் குறித்து வஞ்சின மாலையில் குறிப்பு உண்டு. இவ்வறுவருள் ஐவரைப் பற்றிய கதைகள் பிற்பட்டன. ஆதி மந்தியின் வரலாறு மட்டும் சங்க காலத்தது. ஆனல் அவள் கரிகாலனின் மகள் என சிலப்பதிகாரம் தான் முதலில் கூறுகிறது. இளங்கோவடிகளே இக்கதையைப் புதுக்கி உள்ளார். கண்ணகி வரலாறும் இதுபோலவே இவரால் புதுக்கப்பட்டிருக்க வேண்டும்.

14. நம்தேசத்தின் பல நாடுகளையும் நாட்டினரையும் அடிகள் அறிந்துள்ளார்.

> கொங்கணர் கலிங்கர் கொடுங்கருநாடர்
> பங்களர் கங்கர் பல்வேல் கட்டியர்

என அவர் குறிப்பதில் கங்கர் கட்டியர் என்னும் பெயர்கள் ஒழியப் பிற பெயர்கள் சங்க நூல்கள் அறியாதன.

பங்களர் என்பது வங்க தேசத்தினருக்கு 7, 8-ம் நூற்றுண்டளவில் சாசனங்களில் வழங்கும் பெயர். இளங்கோவின் காலத்தையும் இதனுல் உணரலாம்.

15. வேங்கடம், ஸ்ரீரங்கம். அழகர்மலை, திருவனந்தபுரம் ஆகிய நான்கு நகரங்களை அடிகள் குறிப்பிடுகின்றுர். இவை வைணவத் தலங்கள் ஆகும். சங்க நூல்களில் இவை பற்றிய குறிப்புகள் இல்லை. திருவனந்தபுரத்தைப் பற்றி நம்மாழ்வார் கூறுவார். ஆகவே ஆழ்வார்களின் காலத்தை ஒட்டியது சிலப்பதிகாரம்.

16. சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப்படும் தொண்டி (14-106-112) சேரர்களுக்குரிய தொண்டி அன்று; அது சோழர்க்குரியது. அத்தொண்டி சுமத்திரா ஜாவா போன்ற பிரதேசங்களில் இருந்திருக்க வேண்டும். இந்நகரமும் கி. பி. 8-ம் நூற்றுண்டில் தோன்றியது என்பதற்குச் சான்றுகள் உண்டு. எனவே சிலம்பும் பிற்காலத்தது எனலாம்.

17. "ஆடித் திங்கள் பேரிருள் பக்கத்து அழல்சேர் குட்டத்து அட்டமி ஞான்று வெள்ளி வாரத்து" என கட்டுரைக் காதையில் வரும் அடிகளில் 133-35 வெள்ளி வாரத்து என்பது குறிப்பிடத்தகுந்தது. வாரப் பெயர்களை கிரேக்க சோதிடத்தினின்று பாரதம் பெற்றது என்பது ஆராய்ச்சியாளர் துணிபு. அது கி பி 471 ல் தான் இந்தியக் கல்வெட்டுக்களில் வந்துள்ளது. அது பொது வழக்கில் வந்து பின் தமிழ்நாட்டிற்கு கி பி. 800 அளவில் வந்திருக்கலாம். எனவே சிலம்பும் பிற்காலத்தது.

18. சங்ககாலத்தில் காணப்பெருத சில தெய்வங்களைச் சிலம்பு குறிப்பிடுகிறது. கலைமகளைப் பற்றிய குறிப்பை முதலில் சம்பந்தர்தான் தருகிருர். இளங்கோ கலைமகளை, 'ஆய்கலைப் பாவை', 'நாமகள்' என குறிப்பிடுகின்றுர். எனவே தேவார காலத்திற்குப் பிற்பட்டது சிலம்பு என்பது இதனுல் விளங்கும்

19. தென்னகத்தில் சக்தி வழிபாடும் அது பற்றிய நூல்களும் தோன்றிப் பெருகிய காலம் கி பி 500 - 900 வரை என்பர். (An outline of the Religious literature of India - oxford University Press) இந்நெறியை நோக்கினுலும் சிலப்பதிகாரம் சங்க காலத்துக்குப் பிற்பட்டு கி பி. 8 0 அளவில் தோன்றியது எனலாம்.

20. மணிமேகலையில் கி பி 5-ம் நூற்ருண்டு திங்நாகர் இயற்றிய நியாயப்பிரவேசத்தின் தர்க்க நூல் பகுதிகள் எடுத்தாளப்பட்டுள்ளன. எனவே மணிமேகலை கி பி 5-ம் நூற்ருண்டுக்குப் பிற்பட்டது. சிலம்பும் அப்படியே.

21. 'தெய்வந் தொழாஅள் கொழுநற்றொழுதெழுவாள் பெய்யெனப் பெய்யும் பெருமழை என்ற அப் பொய்யில் புலவன்'' (22 – 59 61) என மணிமேகலை திருக்குறளை எடுத்தாளும். திருக்குறள் கி. பி 6-ம் நூற்ருண்டினது. எனவே மணிமேகலையும் சிலம்பும் அதற்குப் பிற்பட்டது என்பது தெளிவு

22. இந்நூலில் வரும் செய்யுள் விகர்ப்பங்களும் வரிப்பாடல்களும் பல கானல் வரி, வேட்டுவவரி, ஆய்ச்சியர் குரவை கந்துக வரி, வள்ளைப்பாட்டு முதலிய செய்யுள் வகைகள் தேவார திருவாசக காலத்துச் செய்யுள் வகைகளோடு ஒப்பிடற்பாலன. எனவே சிலப்பதிகாரம் கி பி 800-ல் தோன்றியது என்பது இதனுல் விளங்கும்

23. சிலம்பு மேகலை ஆகிய இரு காப்பியங்களின் பாத்திரப் பெயர்களும் ஆராயத்தக்கன.

தேவந்தி. கௌசிகன், மதுராபதி, வசு, குமரன், சங்கமன், துச்சயன், அத்திபதி, காகந்தி, தீவதிலகை, சோழுக.... இப்பெயர்களை நோக்கும் போது இவை

சங்கப் பெயர்கள் அல்ல என நன்கு விளங்கும் வடமொழி நாடகங்களையும் காவியங்களையும் கற்றதனால் கிடைத்த பெயர்களே இவை.

24. மணிமேகலையில் உதயணனின் வரலாறு கூறப் படுகிறது. (15—61-66) இவ்வரலாறு பெருங்கதை யிலிருந்து எடுக்கப்பட்டிருக்க வேண்டும். ஆகவே மணி மேகலையும் சிலம்புமக் கி பி. 800 அளவில் தோன்றியது எனலாம்

25 மணிமேகலையில் குச்சரகுடிகை என வருவது ஆராய்வதற்குரியது இதற்கு கூர்ஜர தேசத்து முறை யில் அமைந்த குடிகை என்பது பொருள் கூர்ஜர சிற்ப முறை கி. பி. 700 அளவில் தமிழ் நாட்டில் வந் திருக்க வேண்டும். எனவே கி. பி. 700-க்குப் பிற்பட்டது மணிமேகலை.

26. சங்க நூல்களில் புரோகிதர் மணச் சடங்கு நிகழ்த்தியதாக குறிப்பு இல்லை. சிலப்பதிகாரத்தில் (1—47-54) உள்ளது. இந்நிகழ்ச்சி நூலின் பிற்பட்ட காலத்தை உணர்த்தும்.

27. கணிகையர் பலவகைக் கலைகள் பயின்று தலைக் கோல் பட்டம் பெற்றதைப் பிற்காலச் சோழர் சாசனம் ஒன்று குறிப்பிடும் அது கி. பி 1060-ல் வெட்டப்பட்டது. தலைக்கோல் பட்டம் கி. பி 800 அளவில் தோன்றியிருக்க வேண்டும் இவ்வழக்கு முதல் முறையாக ஏற்பட்டதைக் குறிப்பிடுவதே சிலம்பின் அரங்கேற்றுக்காதை.

28 செங்குட்டுவனின் நாடக அரங்கில் ஆடப்பட்ட சாக்கையனின் கூத்து பற்றிய குறிப்பு பரகேசரி ராஜேந்திரசோழனின் சாசனத்தில் உள்ளது. இச்சாசனம கி. பி. 10 ம் நூற்றாண்டின் முற்பகுதியில் எழுதப்பட்டது. எனவே இக்கூத்தைக் கூறும் சிலப்பதிகாரமும் முற்பட்ட காலத்ததல்ல.

29 சமணர்களின் கர்மம் பற்றிய கொள்கை வைதிக சமயங்களை எதிர்க்கப் பயன்பட்டது இக் கொள்கை தேவார காலத்தை அடுத்து மிகவும் நுட்பமாகச் செயல் பட்டது. இதனை எளிதில் உணர்த்த வடநாட்டுக் கதைகளைப் பயன்படுத்தியதைப் போல சிலப்பதிகாரத்தையும் பயன் படுத்தினர் அடிகள். இது கி பி. 800 அளவில் நிகழ்ந்திருக்கலாம்.

மேற்குறித்த காரணங்களை ஆராய்கின்ற போது சிலப்பதிகாரம் கி, பி. 800 அளவில எழுதப்பட்டிருக்க வேண்டும் என்பது தெளிவாகும்.

தகடூர் யாத்திரை

சங்க நூல்களை இந்நூல் எடுத்தாளுகிறது.

புறத்திரட்டு 785 — அகம் 2
,, 1370 — புறம் 301
,, 1376 — பதிற்று 42 51
,, 1317 — தொல்-புற-7
,, 227 — நாலடியார் 307

இந்நூலில் பிற்பட்ட காலத்து வழங்கிய சொற்கள் இடம் பெற்றுள்ளன. (கொணரேல், விளியாக்கால் அல்லது தேசு. எனவே நாலடியாரின் காலமான கி, பி. 65)-க்கு பிற்பட்டது தகடூர் யாத்திரை.

உதயணன் கதை அல்லது பெருங்கதை

1. தமிழ்ப் பெருங்கதையின் மூலம் துர்விநீதனின் மொழிபெயர்ப்பாகும். துர்விநீதனின் காலம் கி பி, 6-ம் நூற்றாண்டின் கடைசிப் பகுதி. எனவே கி. பி. 6-ம் நூற்றாண்டுக்கு பிற்பட்டது பெருங்கதை.

2) பெருங்கதையில் நான் என்பது போன்ற பிற்கால வழக்குகள் வருகின்றன.

3) குறள், நாலடி போன்ற நூற்களின் சொற்றொடர்கள் கருத்துக்கள் ஆகியன அப்படியே இந்நூலில் வருகின்றன அதனால் இந்நூல் கி. பி. 750 அளவில் இயற்றப்பட்டிருக்கலாம்.

சீவகசிந்தாமணி

1. சீவகசிந்தாமணியின் உரைச் சிறப்பு பாயிரத்தில் வரும் பொய்யாமொழி என்பவன் கங்கராஜ்யத்தை கி. பி. 908 முதல் 950 வரை ஆண்ட சத்திய வாக்கிய கொங்குணி வர்ம பூதுகப் பெருமானடி என்பவன் ஆவான். சிந்தாமணியும் இக்காலத்தை ஒட்டி கி. பி. 930-ல் எழுதப்பட்டிருக்கவேண்டும்.

2. சிந்தாமணியும் சூளாமணியும் சமகாலத்தவை. இவை மகாபுராணத்திற்குப் பிற்பட்டவை. மகாபுராணம் எழுதி முடித்த ஆண்டு கி. பி. 897. எனவே சிந்தாமணி கி. பி. 10-ம் நூற்றாண்டினது என்பது தெளிவு.

3. சிந்தாமணியின் முதல் நூற்கள் க்ஷத்ர சூடாமணியும், கத்திய சிந்தாமணியும் ஆகும் இவ்வடமொழி நூற்களை ஆக்கிய வாதிப சிம்மனின் காலம் கி. பி. 8 அல்லது 9-ம் நூற்றாண்டாகும். எனவே சிந்தாமணி இக்காலத்தை அடுத்த கி. பி. நூற்றாண்டில் எழுதப்பட்டிருக்க வேண்டும்.

சூளாமணி

சிந்தாமணியையும் சூளாமணியையும் ஒன்றாக வைத்துப் பேசும் வடமொழிச் ஸ்லோகங்கள் பல உண்டு. இராச இராசன் உலாவும்.

> பணி தந்தலகில் பரா எடுத்துச் சிந்தா
> மணி தந்த சூளாமணியான்

என்று கூறும்.

எனவே சூளாமணி கி. பி. 950 அளவில் இயற்றப் பட்டிருக்க வேண்டும்.

நீலகேசி

1. நாலடியாரின் பாடல் ஒன்றை (80) நீலகேசி எடுத்தாளுகிறது (181) எனவே நாலடியாரின் காலமான கி. பி. 7-ம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டது நீலகேசி.

2. பழமொழியின் ஒரு பாடலை (126) இந்நூல் எடுத்தாளுகிறது. (822) எனவே பழமொழியின் காலமான கி. பி. 8-ம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டது நீலகேசி,

3. இந்நூலின் 271-ம் பாடலில் 'ஏல்' என்பது அசையாக வந்துள்ளது. 8 9-ம் நூற்றாண்டு பாவைப் பாடல்களில் இவ்வசை வருவதை நோக்கலாம்.

4. இரும்புக்கும் காந்தத்திற்கும் உள்ள தொடர்பை முதலில் மணிமேகலைதான் கூறுகிறது (277—55-56) நீலகேசியில் இரும்பு காந்தம் செய்தி மணிமேகலையைப் பின்பற்றி வருகிறது. (366) எனவே நீலகேசி மணிமேகலைக்குப் பிற்பட்டது.

5. சிந்தாமணியின் ஒருபாடலை (2812) நீலகேசி. அடியொற்றி (139) வரும். வேறுபாடல்களும் இப்படியே அமைந்துள்ளன. எனவே சிந்தாமணியின் காலமான கி. பி. 950-க்கும் பிறபட்டது நீலகேசி.

6. குண்டலகேசியின் மறுப்பு நூல் நீலகேசி குண்டலகேசியின் காலம் கி. பி. 950-1000 ஆகும். நீலகேசியும் இத்தகால கட்டத்தில் கி. பி. 1000 அளவில் எழுதப் பட்டிருக்கலாம்.

முத்தொள்ளாயிரம்

1. பேராசிரியர் ''பதினெண் கீழ்க்கணக்கினுள்ளும் முத்தொள்ளாரத்தும் ஆறடியின் ஏறாமல் செய்யுள் செய்தார் பிற்சான்றோரும்'' என்பார் (தொல் செய் 158) பிற்சான்றோர் என அவர் குறிப்பதால் முத்தொள்ளாயிரம் சங்க காலத்துக்குப் பிற்பட்டது என்பது தெளிவாகும்.

2. பிற்கால வழக்குச் சொற்கள் இந்நூலில் உள்ளன. நான், போது, பேர், வீணில், ஏல்

3. 'அன்' எனும் பிற்கால எதிர்கால தன்மை ஒருமை விகுதி இந்நூலில் வருகிறது.

4, பேராசிரியர் தொல்காப்பியச் செய்யுள் உரையில் (சூ 239) முத்தொள்ளாயிரத்தை உதாரணம் காட்டுவார். இவ்வுரைகாரரின் காலம் கி. பி. 14-ம் நூற்றாண்டாகும். எனவே முத்தொள்ளாயிரம் கி. பி. 14-ம் நூற்றாண்டுக்கு முற்பட்டது.

5. இளம்பூரணர் தொல்காப்பிய புறத்திணை உரையில் "ஏற்றார்தி ஆயினும்" எனத் தொடங்கும் முத்தொள்ளாயிரப்பாடலைக் கூறுவார். இவரது காலம் கி. பி 12-ம் நூற்றாண்டு. எனவே இக்காலத்துக்கும் முற்பட்டது முத்தொள்ளாயிரம்

6. பேராசிரியர் தம் உரைப் பகுதியில் ''முத்தொள்ளாயிரமும் பொய்கையார் முதலாயினார் செய்த அந்தாதிச் செய்யுளும் கலம்பகம் முதலாயினவும் புதிதாக தாம் வேண்டினவற்றால் பல செய்யுளும் தொடர்ந்து வர இயற்றப்படும் விருந்து என்பதற்கு உதாரணமாகும்" என விளக்கினர். இதனால் அந்தாதிச் செய்யுட்கள் கலம்பகம் முதலிய பிரபந்தங்கள் தோன்றிய 8, 9-ம் நூற்றாண்டுகளில் முத்தொள்ளாயிரமும் இயற்றப்பட்டிருக்கலாம்.

7. பாண்டியனின் குதிரை கனவட்டம்; சேரனின் குதிரை பாடலம் என முத்தொள்ளாயிரம் குறிப்பிடும். இப்பெயர்கள் முதலில் திவாகரத்தில் வருகின்றன. (111-11,12,13) திவாகரத்தின் காலம் கி. பி, 10-ம் நூற்றுண்டு. எனவே திவாகரத்தின் காலத்திற்கு சற்று முன் இந்நூல் தோன்றி இருக்கலாம்,

8. சோழநாட்டின் தலைநகராக தஞ்சை உருவானது. கி. பி. 850 அளவில். முத்தொள்ளாயிரத்தில் சோழர்களைப் பற்றிய குறிப்பு இல்லை. எனவே கி. பி. 850 அளவில் இந்நூல் இயற்றப்பட்டிருக்க வேண்டும்.

9. "பண்டன்று பட்டினம் காப்பு" எனவரும் முத்தொள்ளாயிரவரி பெரியாழ்வாரின் திருமொழியில் நெய்க்குடத்தை எனும் பதிகத்தில் காணப்படுகிறது. "யார்க்கிடுகோ பூசல் இனி" என்னும் முத்தொள்ளாயிரக் கருத்து நாச்சியார திருமொழியில் "ஆர்க்கிடுகோ தோழி அவன் தார் செய்த பூசலையே" என வருகிறது. இவை பெரியாழ்வாரின் காலத்தை அடுத்து இந்நூல் தோன்றியது என்பதை உணர்த்தும்.

10, பழமொழி நானூறிலிருந்து சில பழமொழிகளை இந்நூல் எடுத்தாளுகிறது. எனவே பழமொழியின் காலமான கி. பி. 750 -க்கும் பிற்பட்டது இந்நூல்.

எனவே முத்தொள்ளாயிரம் கி. பி. 9- நூற்றுண்டின் தொடக்கத்தில் தோன்றியது எனலாம்.

பெரியபுராணம்

பெரியபுராணம் அநபாயர் என்னும் சோழமன்னனின் அவையில் அரங்கேற்றப்பட்டது என அதன் பாயிரம் (பாடல் 8) கூறும். அநபாயனும் குலோத்துங்கனும் ஒன்று என்பதற்குப் பெரியபுராணத்தில் சான்று உண்டு (சண்டேசுர-8) இக் குலோத்துங்கனே தில்லையில் பேரம்பலம்

பொன்வேய்ந்தவன் எனபதை இந்நூல் உணர்த்தும். இதே கருத்தைக் குலோத்துங்கச் சோழன் உலா (கண்ணி 46-8) இராஜஇராஜசோழன் உலா (கண்ணி 30-34) ஆகியன கூறும். விக்கிரம சோழனின் மகன் குலோத்துங்கனுக்கே அநபாயன் என்னும் பெயர் உரியது என்பதை இந்நூல்களால் அறியலாம்.

கோகர்ணக் கல்வெட்டு (தென்னிந்தியச் சிலாசாசனம் தொகுதி 7-எண் 1044) பேரம்பலம் பொன் வேய்ந்த குலோத்துங்கச்சோழ சக்கரவர்த்தியைப் பற்றிக் கூறும். இதற்கு வேறு கல்வெட்டுச்சான்றுகளும் உண்டு. அநபாய குலோத்துங்கனை இரண்டாம் குலோத்துங்கன் என ஆராய்ச்சியாளர் கூறுவர். இவனது ஆட்சிகாலம் கி. பி. 1133-1146 ஆகும்.

எனவே பெரியபுராணம் சுமார் கி. பி. 1140 அளவில் இயற்றபபட்டிருக்க வேண்டும்.

கம்பன்

எண்ணிய சகாத்த எண்ணூற்றேழின்மேல் சடையன் வாழ்வு
நண்ணிய வெண்ணெய் நல்லூர் தன்னிலே கம்பநாடான்
பண்ணிய இராமகாதை பங்குனி அத்த நாளில்
கண்ணிய அரங்கர் முன்னே கவியரங்கேற்றினானே.

இப்பாடலில் சகாத்தம் 807 என வருவதால் கம்பர் கி. பி. 884-ல் தம காவியத்தை இயற்றினர் என்பர். இக்கருத்து பொருந்தாது. காரணம் பின் வருமாறு.

1. கம்பர் பாடிய சடகோபரின் (நம்மாழ்வார்) காலம் கி. பி. 10-ம் நூற்றாண்டின் முற்பகுதி. முன் கூறிய பாடலை ஒத்துக் கொண்டால் கம்பர் நம்மாழ்வாருக்கு முற்பட்டவர் என்று ஆகிவிடும்.

2. கி. பி. 9-ம் நூற்றாண்டு திருமங்கையாழ்வாரின் பாசுரத்தின் (1418) கருத்தையும் சொல்லையும் கம்பர் கையாளுகிறார். (சுந்தர-காட்சி-29)

3. கூனியின் முதுகில் உண்டை தெறித்த கதை வான்மீகத்தில் இல்லை. இதைத் திருமழிசை ஆழ்வாரும் (800) நம்மாழ்வாரும் கூறுகின்றார்கள். கம்பர் இந்நிகழ்ச்சியைக் குறிப்பிடுவார். (மந்திரை சூழ்ச்சி-4) எனவே மேற்கூறிய ஆழ்வார்களுக்குப் பிற்பட்டவர் கம்பர்.

4. 'சகாப்தம்' - தமிழ் நாட்டில் 8-ம் நூற்றாண்டில் தான் வழங்கத் தொடங்கியது எனச் சாசனங்கள் வாயிலாக அறிகிறோம். அது சில நூற்றாண்டுகள் சென்ற பின்பே பொது வழக்கில் வந்திருக்க முடியும். ஆகவே மேற்குறித்த பாடல் தவறுடையது.

5. 'அரங்கேற்றம்' என்னும் தொடர் நாட்டியக் கலை ஒன்றனுக்கே உரியதாய் இருந்தது. பிற்காலத்தில்தான் அவைக்களத்தில் நூலைக் கேட்பித்த செயலைச் சொல்ல இச்சொல்லைப் பயன்படுத்தினர்.

6. எண்ணிய சகாப்தம் என்னும் இப்பாடல் இப்போது கிடைக்கும் இராமாயணப் பிரதிகளுள் மிகப் பழையதான தென் திருப்பேரைப் பிரதியில் காணப்படவில்லை. ஆகவே இப்பாடல் பிற்காலத்தது.

எனவே மேற்கண்ட பாடலை வைத்துக் கொண்டு கம்பனின் காலத்தைக் கணிக்க முடியாது. அவரது உண்மையான காலத்தைக் கணிக்க பின்வரும் காரணங்கள் உதவும்.

1. கம்பரைக் குறித்து வரதராசர் பாகவதத்தில் ஒரு பாடல் (திருவரங்கப்-148) வருகிறது. எனவே கி. பி. 16-ம் நூற்றாண்டுக்கு முற்பட்டவர் கம்பர்.

2 கி. பி. 15-ம் நூற்றாண்டு அரகேசியாரின் இரகுவம்ச பாயிரத்தில் தமிழ்க் கம்ப நாடான் என வருகிறது. எனவே 15-ம் நூற்றாண்டுக்கு முற்பட்டவர் கம்பர்.

3. நன்னூல் மயிலைநாதர் உரையில் கம்பர் என்னும் பெயர் உதாரணமாகக் காட்டப்பட்டுள்ளது. (சூத் 114) மயிலைநாதரின் காலம் ஏறத்தாள கி. பி. 1300 எனலாம். எனவே கம்பர் அதற்கும் முற்பட்டவர்.

4. கி.பி. 1376-ம் ஆண்டில் பொறிக்கப்பட்ட கன்னடக் கல்வெட்டு ஒன்று கம்பராமாயணத்தைக் குறிப்பிடுகிறது. சுமார் 50 ஆண்டுகளாவது கம்பராமாயணம் கன்னட நாட்டில் வழங்கிய பிறகுதான் கல்வெட்டில் ஏறியிருக்க முடியும். ஆகவே கி. பி. 1325-க்கு முற்பட்டவர் கம்பர்.

5. பெரிய திருமொழியின் வியாக்கியானத்தில் கம்பரின் வரிகளை (பால - ஆற்றுப்- 1) மேற்கோள் காட்டுவார் பெரியவாச்சான் பிள்ளை. இவரது காலம் கி. பி 13-ம் நூற்றாண்டாகும். எனவே இதற்கும் முற்பட்டவர் கம்பர்.

6. கி. பி. 12-ம் நூற்றாண்டு வீரசோழிய உரையில் "கம்பனரிடை பெருமை உளது" (வேற்-7) என வருகிறது. இவ்வுரை குறிக்கும் வாசகத்திலிருந்து கம்பரும் இவ்வுரையின் காலத்தவர் எனக் கொள்ளலாம்.

7. கம்பர் சிந்தாமணியில் (257)

"வாளினல் பேசலல்லால் வாயினல் பேசல் தேற்ருேன்"

என வருவதை

> வில்லினல் சொலின் அல்லது வெந்திறல் வெல்கச்
> சொல்லினல் சொலக் கற்றிலம் யாமெனச்
> சொன்னன் (கும்பகர்—235)

எனக் கூறுவார். இப்படிப் பல. சிந்தாமணியின் காலம் கி பி 10-ம் நூற்றாண்டின் முற்பகுதி. எனவே அதற்குப் பிற்பட்டவர் கம்பர்.

8. தமிழ் நாவலர் சரிதையில், தெலுங்கு ஓரங்கல் நாட்டு பிரதாபருத்திரனின் அவைக்கு கம்பர் சென்ருர்; அவனைப் பாராட்டினர் என்னும் செய்தி காணப்படுகிறது. இதை உண்மை என்றே கொள்ளலாம். கம்பரின் பாடல்களில் மகரதம், தம்மி, கிச்சு, அந்நா, அக்கட போன்ற தெலுங்குச் சொற்கள் காணப்படுகின்றன. பிரதாபருத்திரனின் கல்வெட்டுக்கள் கி. பி. 1162—1179 ஆண்டுகளில் காணப்படுகின்றன. எனவே கம்பர் 12-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்திருக்கலாம்.

9. கம்பரும் ஒட்டக்கூத்தரும் சமகாலத்தவர்கள் என்பதை சோழ மண்டில சதகம் கூறும் (பாடல் 80) கம்பர் சடையப்ப வள்ளலால் ஆதரிக்கப்பட்டவர் என்பதற்குச் சான்றுகள் பல உள. சடையப்பரின் தந்தை சங்கரன் என்பவரிடம் ஒட்டக்கூத்தர் உதவித் தொழில் புரிந்தார் எனச் சோழமண்டில சதகம் கூறும். (93) எனவே ஒட்டக் கூத்தரின் முதுமைக் காலத்தில் கம்பர் இளைஞராக இருந்திருக்க வேண்டும்.

10. கம்பரின் காவியத்தில் மருந்து மலைப்படலத்தில் (பாடல் 58) ''சென்னிநாள் தெரியல் வீரன் தியாக விநோதன் தெய்வப் பொன்னி நாட்டு உவமைவைப்பைப் புலன் கொள நோக்கில் போனான்" என வருகிறது. "தியாக விநோதன்" என்பவன் ஒரு சோழ அரசன். ஒட்டக் கூத்தரின் காலத்தவர்களான விக்கிரமசோழன், குலோத்துங்கன் இராசஇராசன் ஆகியோர்களில் தியாக விநோதன் என்னும் பெயர் குலோத்துங்கனுக்கு மட்டுமே வழங்கப்பட்டது என்பதற்குக் கல்வெட்டுச் சான்றுகள் உள. கும்பகோணம் வாணிபுரீச்சுவரர் கோவிலின் அக் கல்வெட்டு மூன்றாம் குலோத்துங்கனைத் (கி. பி. 1178-1216) தியாகவிநோதன் எனககூறும். எனவே தியாக விநோதன் எனக் கம்பரால் குறிக்கப்பட்டவன் மூன்றாம் குலோத்துங்கன் ஆவான். ஆகவே கம்பர் கி. பி. 12-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவர் என்பது தெளிவு.

11. சில இராமாயண ஏடுகளில் விடை கொடுத்த படலத்தின் பின் அரிய செய்யுட்கள் சில உள்ளன. அவற்றுள்

ஆவின் கொடை சகரராயிரத்து நூறொழித்து
தேவன் திருவழுந்தூர் நன்னாட்டு- மூவலூர்ச்
சீரார் குணதித்தன் சேயமலையைப் பாடினான்
காரார் காகுத்தன் கதை

என்பதும் ஒன்று. சகாப்தத்தைச் சகர ஆண்டு என்பது அக்கால வழக்கு. அதனால் சகாப்தம் 1100-ல் அதாவது 1178-ல் கம்பர் இராமாயணத்தை எழுதி முடித்தார் எனத் தெரிகிறது.

சேந்தன் திவாகரம்

1) இந்நூலில் வடமொழிச் சொற்கள் அதிகம் காணப் படுகின்றன, ஆகவே இது சங்க நூற்களுக்கு மிகவும் பிற்பட்டது.

2. சாளுக்கிய அரசனின் கேழற் கொடியைத் தமிழ் அரசர்களின் கொடிக்கு ஒப்பாக இந்நூல் கூறுகிறது. அதனால் சாளுக்கிய மன்னர்கள் புகழடைந்த காலத்தில் இந்நூல் தோன்றியிருக்க வேண்டும்.

3) இளம்பூரணர் இந்நிகண்டை எடுத்தாளுகிறார். (தொல் சொல் 390) எனவே அவரது காலத்திற்கு முற்பட்டது இந்நூல்.

4) குறுநில வேந்தர்களின் பெயர் வரிசையில் அரட் டர் எனும் பெயர் இந்நூலில் வருகிறது. அது ராட்டிர கூடரையே குறிக்கும். ராட்டிரகூடர் பிரபலமாய் விளங் கிய காலம் கி.பி. 750-950 வரை. எனவே கி.பி. 10-ம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டது இந்நூல்.

5. சாளுக்கியரின் காலமாக கி.பி. 6-8-ம் நூற்றாண்டு, 10-12-ம் நூற்றாண்டு ஆகிய இரண்டையும் குறிப்பர். இவற்றில் கி.பி. 10-12-ம் நூற்றாண்டுகளே இங்கு பொருந்தும். அதனால் கி.பி. 11-ம் நூற்றாண்டில் திவாகரம் இயற்றப்பட்டது எனலாம்.

தண்டியலங்காரம்

1. வடமொழித் தண்டியின் காலம் கி.பி. 7-ம் நூற் றாண்டு. தமிழ்த் தண்டியலங்காரம் அதற்குப் பிற்பட்டது,

2. இந்நூலின் மூலமும் உதாரணச் செய்யுளும் ஒரே ஆசிரியரால் இயற்றப்பட்டன என பிரயோக விவேகம் இயற்றிய சுப்பிரமணிய தீட்சிதர் அதன் உரையில் கூறு வார்.

3. இந்நூலில் வரும் உதாரணச் செய்யுட்கள் சில அநபாயன் என்னும் சோழமன்னனைப் பாராட்டுகின்றன. "அநபாயன்" இரண்டாம் குலோத்துங்கனே என்பதற்குச் சான்றுகள் உள.

4. வேற்றுமையணியின் உதாரணச் செய்யுள் கூறும் கூத்தன் ஒட்டக் கூத்தனே. இக் கூத்தன் பாராட்டும் குலோத்துங்கன் கி. பி. 12-ம் நூற்றாண்டினன். அதனால் தண்டியலங்காரத்தின் காலம் கி. பி. 12-ம் நூற்றாண்டாகும்.

நன்னூல்

1) சீயகங்கன் என்னும் அரசனின் ஆணைப்படி நன்னூல் இயற்றப்பட்டது என அதன் பாயிரம் கூறும். சீயகங்கன் மூன்றாம் குலோத்துங்கனின் (கி. பி. 13-ம் நூற்றாண்டு) காலத்தவன் என கோபிநாதராவ் சான்றுகளுடன் நிறுவி உள்ளார்.

2) மூன்றாம் குலோத்துங்கனின் மகனாகிய மூன்றாம் இராசஇராசனைச் சிறை எடுப்பித்த கோப்பெருஞ் சிங்கனுக்கு அடங்கிய சிற்றரசன் சீயகங்கன் என்பதை ஒரு சாசனத்தால் அறிகின்றோம் (SII vol XII P202)

3) கோப்பெருஞ் சிங்கனின் இறுதியாண்டு கி. பி. 1243. எனவே சீயகங்கனின் கி. பி. 13-ம் நூற்றாண்டின் முற்பகுதியினன் (சுமார் 1200-1250) எனலாம். ஆகவே நன்னூலும் இக்காலப் பகுதியில் தோன்றியிருக்க வேண்டும்.

இறையனார் களவியல்உரை

1) மு. இராகவஐயங்கார், இவ்வுரை கி. பி. 7-ம் நூற்றாண்டில் இயற்றப்பட்டு கி. பி. 10-ம் நூற்றாண்டில் எழுதி முடிக்கப்பட்டிருக்க வேண்டும் என்று கூறுவார். இக் கருத்தை ஒத்துக் கொள்வதற்குச் சில தடைகள் உள்ளன.

2) நாலடியாரும் (319) பழமொழிநானூறும் (303) அகப்பொருள் உரையில் வருகின்றன. இதனால் இவ்வுரை கி. பி. 8-ம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டது எனலாம்.

3. சுமார் 930-ல் தோன்றிய சிந்தாமணியின் செய்யுட்கள் (2019, 2749) அகப்பொருள் உரையில் வசனமாக வருகின்றன. எனவே கி. பி. 930-க்குப் பிற்பட்டது இந்நூல்.

4. பாண்டிய அரசர்களைத் தேவர் என்று குறிப்பிட்டது பிற்காலத்தில்தான். இந்நூலில் "அக்குலத்துள் (பாண்டியகுலம்) தோன்றுவார் தேவர்களே ஆகலாம்" என வருகிறது.

5. நன்னூலில் வரும் "பஞ்சிதன் சொல்லாக" எனத் தொடங்கும் வெண்பாவை இந்நூல் உரைநடையாகக் கையாளுகிறது. நன்னூலின் காலம் கி. பி 13-ம் நூற்றாண்டின் முற்பகுதி. எனவே அகப்பொருள் உரையும் ஏறத்தாழ இதே காலத்தில் ஆக்கப்பட்டிருக்க வேண்டும்.

பாரத வெண்பா

1. பாரத வெண்பா கி. பி. 9-ம் நூற்றாண்டில் எழுதப்பட்டதெனக் கூறுவர். இதற்கு முக்கிய சான்றாக தெள்ளாற்றுப் போரைக் குறிப்பிடும் பாரத வெண்பா பாடலைக் கூறுவர். தெள்ளாற்றில் கி. பி. 9-ம் நூற்றாண்டில் மட்டுமன்றி, கி. பி. 1231-32லும் ஒரு போர் நடந்திருக்கிறது. (தென்னிந்திய சிலா சாசனம் 12 எண் 180)

2. பாரத வெண்பாவில், கி. பி. 13-ம் நூற்றாண்டு அளவில் எழுதப்பட்ட திவ்வியப் பிரபந்த வியாக்கியானங்களில் ஆளப்பட்ட சொற்களும் தொடர்களும் பாரத வெண்பாவில் வருகின்றன. (விவஸ்தை, சமய விரோதம், அடா, சண்டன், புருஷகாரம், சுப்பிரமணியசாமி)

3. பிற்காலச் சோழரின் சாசனங்களில் பயிலும் வீராபிஷேகம் என்னும் சொல் பாரத வெண்பாவில் வருகிறது.

4. இந்நூலில் வரும், அசதி, சுரோணிதம், என்னும் பிற்பட்ட சொல் வழக்காறுகளும் பிற்பட்ட காலத்தை நினைவுறுத்துகின்றன.

5. கொன்றை வேந்தனில் வரும் "மீகாமனில்லா மரக்கலம் ஓடாது" என்னும் தொடரை இந்நூல் அப்படியே எடுத்தாளுகிறது. கொன்றைவேந்தன் எழுதிய அவ்வையார் கம்பரின் காலத்தவர். கம்பர் கி. பி. 13-ம் நூற்றாண்டினர். எனவே பாரத வெண்பாவும் இதே காலத்தில் எழுதப்பட்டிருக்க வேண்டும்.

பரிமேலழகர்

1. காமத்துப்பாலின் அவதாரிகையில் "வடநூலுள் போஜ ராஜனும் சுவை பலவென்று கூறுவகர்" என்று பரிமேலழகர் கூறுவர். போஜராஜனின் காலம் கி. பி. 11-ம் நூற்றாண்டின் முற்பகுதி. எனவே பரிமேலழகர் கி. பி. 11-ம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டவர்.

2. "ஒரு பொருள் பன்மொழி" என்னும் தொடரை இலக்கணநூல்களுள் முதலில் கூறுபவர் நன்னூலார். இத்தொடரை பரிமேலழகரும் கையாளுகிறார் எனவே நன்னூலின் காலமான கி. பி. 13-ம் நூற்றாண்டின் முற்பகுதிக்குப் பிற்பட்டவர் பரிமேலழகர்.

3. சேனவரையர் கி. பி. 13-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவர். அவர் கருத்துக்களைப் பரிமேலகர் பின்பற்றி உள்ளார் என ஸ்ரீ மு. ராகவையங்கார் கூறுவார்.

ஆதலால் பரிமேலழகர் கி. பி. 14-ம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் எனலாம்.

கயாதர நிகண்டு

1. அரும்பொருள் விளக்க நிகண்டு கி. பி. 1763-ல் இயற்றப்பட்டது. அந்நிகண்டு கயாதரரையும் அவருடைய நிகண்டையும் குறிப்பிடுகிறது. எனவே கி. பி. 1763-ல் கயாதரம் புகழ்பெற்றிருந்தது என்பதை உணரலாம்.

2. மாறனலங்கார உரையில் கயாதர நிகண்டு சுட்டப்படுகிறது. இவ்வுரையின் காலம் 1575. எனவே கி. பி. 1575-க்கு முற்பட்டது கயாதரம்.

3. கயாதர நிகண்டில் "காரிகை ஒரு மொரு நூலும் வெண்ணும் கலித்துறையும்" (412) என வருகிறது. இங்கு குறிப்பிடப்படும் யாப்பருங்கலக் காரிகையின் காலம் கி. பி. 11-ம் நூற்றாண்டு. எனவே கயாதரம் கி. பி. 11-ம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டது. காரிகை, நீண்ட காலம் வழக்கில் இருந்த பிறகுதான் கயாதரம் அதைப் பயன் படுத்தியிருக்க முடியும். எனவே கயாதரநிகண்டு கி. பி. 14-15 நூற்றாண்டுகளில் இயற்றப்பட்டிருக்கலாம்.

புறத்திரட்டு

1. புறத்திரட்டு நூலுக்கு சுருக்கம் ஒன்று உண்டு. அதில் கி. பி. 17-ம் நூற்றாண்டு திருமலைக் கொழுந்து பிள்ளையின் பாடல்கள் கோக்கப்பட்டிருக்கின்றன. ஒருநூல் நீண்ட காலம் பிரச்சாரத்திலிருந்த பிறகே அதற்குச்சுருக்கம் தோன்றியிருக்க முடியும். எனவே கி. பி. 16-ம் நூற்றாண்டில் புறத்திரட்டு பிரச்சாரத்தில் இருந்திருக்கிறது.

2. மதுரைத் தமிழ்ச் சங்க புறத்திரட்டு பிரதியில் இருநகை மான்மிய செய்யுட்கள் (காலம் 1548) உள்ளன. அதனால் கி. பி. 16-ம் நூற்றாண்டில் புறத்திரட்டு பெயர் பெற்றிருக்க வேண்டும்.

3. கம்பரின் பாடல்கள் புறத்திரட்டில் உள்ளன. அதனால் கி. பி. 12-ம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டது புறத்திரட்டு. எனவே புறத்திரட்டு 1450 அளவில் தொகுக்கப்பட்டிருக்கலாம்.

அனுபந்தம் 1

பேராசிரியரின் வாழ்க்கைக் குறிப்புகள்

(பேராசிரியரின் புதல்வி திருமதி வை. சரோஜினி அவர்கள் பேராசிரியரின் வாழ்க்கை வரலாற்றை எழுதி உள்ளனர். கீழ்வரும் குறிப்புகள் அந்நூலைத் தழுவியவை)

தமிழகத்தின் தெற்கே பொருநை ஆற்றங்கரையில் உள்ளது சிக்கநரசையன் கிராமம். அங்கு சைவ வேளாளர் மரபில் பிறந்தவர் சங்கரலிங்கம் பிள்ளை. அவர் "தாமிர வருணி புராணம் எனனும் பொருநை மாதாவின் புராணம்"- என்னும் நூலைப் பாடியவர் அவரது மகன் சரவணப் பெருமாள் பிள்ளை வடமொழியிலும் தமிழிலும் வல்லவர். அவர் ஆங்கில அரசின் உயர்ந்த பதவியான ரெவின்யூ இன்ஸ்பெக்டர் பதவியை வகித்தவர். அவரது மனைவி பாப்பம்மாள் ஆகும். அவர்களுக்கு 1891-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 12 ம் தியதி வையாபுரியார் பிறந்தார்.

வையாபுரியாருக்குப் பாலவராயர் என்னும் பெயரும் உண்டு பிற்காலத்தில் பாலையா என்னும் பெயரில் கட்டுரை எழுதி உள்ளார். வையாபுரியாரின் ஆரம்ப காலப் படிப்பு கணபதியாபிள்ளை ஆரம்பப் பாடசாலையிலும் திருநெல்வேலி இந்துக்கலாசாலையிலும் நடந்தது இந்துக்கலாசாலையில் அப்போது தமிழ்ப் பண்டிதராய் இருந்தவர் யாழ்ப்பாணம் சுவாமிநாத பண்டிதராவார்.

பள்ளிப்படிப்பின் போது குறுக்குத்துறை மடத்தில் சில காலம் தங்கியிருந்த பாம்பன் ஸ்ரீ குமரகுருதாச

சுவாமிகளின் தொடர்பு வையாபுரியாருக்கு ஏற்பட்டது. நெல்லையில் அவரது F. A. படிப்பு முடிந்ததும் சென்னை கிருஸ்தவக் கல்லூரியில் வரலாறு பொருளாதாரம் ஆகிய பாடங்களைப் படித்து B, A. பட்டம் பெற்றார். மாநிலத்தில் முதல்வராக (1912) வெற்றி பெற்றதால் சேதுபதி தங்கப் பதக்கம் அவருக்குக் கிடைத்தது.

1912-ல் பாலராமபுரம் (கேரள மாநிலம்) வேலாயுதம் பிள்ளையின் புதல்வி சிவகாமியை மணந்தார். 1914-ல் திருவனந்தபுரத்தில் B. L. படித்து முடித்தார். அதே ஆண்டு திருவனந்தபுரம் நீதிமன்றத்தில் வழக்கறிஞராக பதிவு செய்து கொண்டு வாழ்ந்தாலும் தமிழ் ஆய்வே அவருக்கு முக்கியமாக இருந்தது அப்போது செந்தமிழ் பத்திரிகையில் புறநானூறு 13-ம் செய்யுள் பற்றி எழுதினார். அவரது முதல் கட்டுரை அது.

1923-ல் நெல்லையில் கம்பர் கழகத்தை ஆரம்பித்தார். 1926-ல் தமிழ் லெக்ஸிக்கன் பதிப்பிக்கும் பொறுப்பை ஏற்றார் 1936 வரை அப்பணியைச் செய்தார். தமிழ் லெக்ஸிகனை வெற்றிகரமாக வெளியிட்டதால் 1938-ல் அவருக்கு ராவ்சாஹிப் பட்டம் கிடைத்தது.

1936 முதல் 1946 வரை சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவராக பணி புரிந்தார். அப்போது ஜெர்மன் பிரஞ்சு முதலிய மொழிகளைக் கற்றார்.

1944-ல் காசியில் அகில இந்திய கீழ்நாட்டு கலைஞர் மாநாட்டில் word study and chronology in Tamil Literature என்னும் தலைப்பில் பேசினார். 1944-ல் நாகபுரியிலும் 1951-ல் லெட்சுமணபுரியிலும் நடைபெற்ற அகில இந்திய கீழ்நாட்டு மாநாட்டிலும் தலைமை வகித்து திராவிட மொழிகள் பற்றி ஆய்வுரை நிகழ்த்தினார்.

1951 முதல் 1954 வரை திருவனந்தபுரம் பல்கலைக் கழகத்தில் தமிழ் ஆராய்ச்சித் துறைத் தலைவராக

இருந்தார். 1955-ல் தமிழ் எழுத்தாளர் சங்கம், ஸ்ரீ பிரகாசம் தலைமையில் வையாபுரியாருக்கு கேடயம் வழங்கிப் பாராட்டியது.

வையாபுரியார் பாரதியைச் சந்தித்திருக்கிறார். வ. வே சு அய்யர் அவரது நெருங்கிய நண்பர். அவர் சென்னை பல்கலைக்கழகத்தின் B. O. L., M. O. L., M. A. தேர்வுகளுக்குத் தலைமைத் தேர்வாளராக இருந்தார். ceylon civil service தமிழ்த் தேர்வாளராகவும், Jafna Oriental Society Examination, கல்கத்தா பல்கலைக் கழகத்து Institute of Engineering, Banglore Board of Examination மதுரைத் தமிழ்ச்சங்கம் இவற்றில் பொறுப்பாளராக இருந்திருக்கிறார். சென்னை தொழில் நுட்ப கலைச்சொல் அகராதிக் குழுவிலும், தணிக்கை குழுவிலும் அங்கத்தினராயிருந்தார்.

1956 பெப்ரவரி 17–ல் அமரரானார்.

அனுபந்தம் - 2

பேராசிரியரின் நூற்களும் கட்டுரைகளும்

(1) *ஆராய்ச்சி உரைத்தொகுதி*

முதல் பதிப்பு *1930* : எஸ் – வி – பி.

(2) *தமிழின் மறுமலர்ச்சி*

முதல் பதிப்பு : செப்டம்பர் *1947*; நெல்லை நவபாரதி பிரசுராலயம்.

1) *தமிழின் மறுமலர்ச்சி*
2) *விடுதலை வேண்டும்*
3) *தமிழும் சுதந்திரமும்*
(*15-8-'47 சுதந்திர தினத்தில் வெளியானது*)

4) பாரதியுகம்
5) பாரதியும் தமிழும்
6) நவீன கீதை
7) தமிழ் எழுத்துக்களின் வளர்ச்சி
8) தமிழில் சொல் வளர்ச்சி
9) தமிழில் வசன நடை
(திருச்சி A. I. R–ல் டி. கே. சி. அவர்களும் வையாபுரியாரும் நிகழ்த்திய விவாதத்தை அடிப்படையாகக் கொண்டது)
10) வளரும் மொழி உரைநயம்
(1-11-50 அன்று சென்னை A. I R-ல் பேசியதன் சுருக்கம்)
11) தமிழ்ப் பாட்டும் இசையும்
12) மறுமலர்ச்சியும் கவிமணியும்
13) புதிய இலக்கிய முறை
14) புதிய இலக்கணம்
15) தமிழும் எதிர்காலமும்.

(3) தமிழ்ச் சுடர் மணிகள்

முதல் பதிப்பு ஜனு 1949; பாரி நிலையம்–சென்னை

1. தொல்காப்பியம்
   i பிறப்பகம் (வை. மு. கோவின் அறுபதாம் ஆண்டு மலர்)
   ii சமயம் (செந்தமிழ் 1920)
   iii காலம் (டாக்டர் குன்கன்ராஜா அன்பளிப்புமலர்)
2. கபிலர் (இலக்கியப்பூந்துணர்)
3. திருவள்ளுவர்.
   i வாழ்க்கை வரலாறு (சித்திரா வாசகம்)
   ii திருநாள் (செந்தமிழ்)
   iii காலம் (டாக்டர் குன்கன்ராஜா அன்பளிப்பு மலர்
   iv நூல் பெயர்
   v நூல் அமைப்பு

4. மாணிக்கவாசகர்
   - i கர்ண பரம்பரை வரலாறு (கலைமகள்)
   - ii மாணிக்கவாசகரும் மலைநாடும் (திரு. வி. உலகநாத முதலியார் மணிவிழா மலர்)

5. கம்பர்
   - i காலம் (செந்தமிழ்)
   - ii திருநாள் (,,)

6. சடையப்ப வள்ளல் (நவநீதம்)
7. பவணந்திமுனிவர் (கலைமகள்)
8. புகழேந்தியார் (சித்திராவாசகம்)
9. பரிமேலழகர் (செந்தமிழ்)
10. குமரகுருபரர் (குமரகுருபரர்)
11. துறையூர் சிவப்பிரகாச சுவாமிகள் (சில்பஸ்ரீ)
12. இராமலிங்க சுவாமிகள் (காவியக் காதல்)
13. மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை (கலைமகள்)
14. சி. வை. தாமோதரன் பிள்ளை (ஈழ கேசரி)
15. ஆசிரியர் சுந்தரம்பிள்ளை
    - i வாழ்க்கை (குமரிமலர்)
    - ii தமிழ்த் தொண்டு (வசந்தம்)
    - iii நாடகக் கவிஞர் (செந்தமிழ்)

16. கனக சபைப்பிள்ளை (,,)
17. மகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர்
    - i தொண்டின் பெருமை (செந்தமிழ்)
    - ii வாழ்க்கையும் மதிப்பும் (1948-ல் எழுதப்பட்டது)
    - iii நினைவு நாள் (உரைமணிமாலை)

18. மகாவித்துவான் ரா. ராகவஐயங்கார் (கலைமகள்)
19. தேசியக்கவி சுப்பிரமணிய பாரதி
    - i வாழ்க்கை (சித்திரவாசகம்)
    - ii நான் கண்ட பாரதி (லோகோபகாரி)

20. நான் கண்ட வ. உ. சி. (வ உ.சி. மலர்–பம்பாய் தமிழ்ச் சங்கம்)

21. இசைச் செல்வர் இலக்குமணபிள்ளை (தினமணிக் கதிர்)
22. மு. இராகவையங்கார் (60-ம் ஆண்டு நினைவு நூல்)
23. கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை.

(4) தமிழர் பண்பாடு

முதல் பதிப்பு ஜூன் 1949 தமிழ் புத்தகாலயம் சென்னை.

1. தமிழர் பண்பாடும் இலக்கியமும்
2. பண்டைத் தமிழக வாழ்க்கை
3. புறநானூறும் தமிழரும்.
4. அகநானூறும் காதலும்
5. இராமசரிதமும் தமிழ் நாடும்.
6. கவிதை
7. கம்பன்
8. இலக்கிய மரபுகள்; பாத்திரங்கள்
9. உத்தம சகோதரன்
10. இலட்சுமணன்
11. கும்பகர்ணன்.
12. அழகுத் தெய்வம்
13. கற்புத்தெய்வம்
14. நகைச்சுவை
15. சமயமும் லட்சியங்களும்

(5) சிறுகதை மஞ்சரி

முதல் பதிப்பு 1949. தினமணி வெளியீடு
சிறுகதைகள் :

1. சுசீலை
2. ராமுவின் சுயசரிதம்
3. உதிர்ந்த மலர்
4. பேசா மடந்தை

5. ஓர் இரவு
6. சந்திரா பழிவாங்கியது
7. மத்தளக்காரன்
8. பாலகோபாலன் வழக்கு

(6) இலக்கிய உதயம் பகுதி 1

முதல் பதிப்பு செப்டம்பர் 1950 பாரி நிலையம்.

1. எகிப்து
2. பாபிலோனியா
3. பாலஸ்தீனம்
4. பாரசீகம்
5. சீனம்

(7) உரைமணிமாலை மாணவர்க்கு

முதல் பதிப்பு 1951. எஸ். வி. பி.

(8) இலக்கிய உதயம் பகுதி 2

முதல் பதிப்பு அக்டோபர் 1952 தமிழ்புத்தகாலயம்

1. ரிக்வேதம்
2. அதர்வணவேதம்
3. சாமவேதம்
4. யஜீர்வேதம்
5. பிராமணங்கள்
6. ஆரண்யங்கள்
7. உபநிஷதங்கள்
8. சூத்திரங்கள்
9. வியாகரணம்
10. மகாபாரதம்
11. இராமாயணம்
12. புராணங்கள்
13. உபபுராணங்கள்
14. தாந்திரிக இலக்கியங்கள்

15. விநய பிடகம்
16. ஸீத்தபிடகம்
17. அபிதம்ம பிடகம்
18. திருமுறைகளைச் சாராதபாலி இலக்கியங்கள்
19. பௌத்த வடமொழி இலக்கியங்கள்
20. மகாயானப் பெரியோர்களும் கவிஞர்களும
21. மகாத்மியங்கள் தோத்திரங்கள் காரணிகள் தந்திரங்கள்

(9) இலக்கிய தீபம்

முதல் பதிப்பு நவம்பர் 1952 பாரி நிலையம்

1. இருவகை இலக்கியம் (கலைமகள்)
2. பத்துப்பாட்டும் அவற்றின் கால முறையும் (செந்தமிழ்)
3. திருமுருகாற்றுப்படை (மதுரைத் தமிழ்ச்சங்கம் பதிப்பு முகவுரை)
4. நெடுநல்வாடையும் நக்கீரரும் (ச. த. சர்குணர் ஆண்டுமலர் 1937)
5, பாலையின் அரங்கேற்ற மண்டபம் (கலைமகள்)
6. தொகை நூல்களின் காலமுறை (குமரிமலர்)
7. குறுந்தொகை (கரந்தை கட்டுரை தொகுதி 1938)
8. குறுந்தொகைச் செய்யுளில் சரித்திரக் குறிப்பு (கலைமகள்)
9. எருமணம் (கலைமகள்)
10. பதிற்றுப்பத்தின் கடவுள் வாழ்த்து (கலைமகள்)
11, அதிகமான் அஞ்சி
12. மௌரியர் தென்னிந்தியப் படையெடுப்பு (செந்தமிழ்)
13. காவிரிப்பூம்பட்டினம் (ஹனுமான்)
14. தொண்டி நகரம் (சக்தி)
15. முத்தொள்ளாயிரம் (வசந்தம் 1943)
16. முத்தொள்ளாயிரத்தின் காலம் (கலைமகள்)

(10) இலக்கிய மணிமாலை

ஏப்ரல் 1954 தமிழ்ப்புத்தகாலயம்

1. தொகை நூல்கள்
(புறத்திரட்டு-முன்னுரை)
2. பதினெண் கீழ்க்கணக்கு (பதினெண் கீழ்க்கணக்கு பதிப்பு-முகவுரை)
3. சிலப்பதிகாரம்-1 (சண்முகம் செட்டியார் புகார் காண்ட முகவுரை)
4. சிலப்பதிகாரம்-2 (ஜகன் மோஹினி வெள்ளிவிழாமலர்)
5. நிகண்டுகள்
   i அரும்பொருள்விளக்க நிகண்டு
   (நூல் பதிப்பு முகவுரை)
   ii கயாதர நிகண்டு (நூல் பதிப்பு முகவுரை)
   iii நாம தீப நிகண்டு (,,)
   iv பொதிகை நிகண்டு (கலா நிலையம்)
   v நிகண்டு சூடாமணி

(11) கம்பன் காவியம்

பெப்ரவரி 1954 தமிழ்ப்புத்தகாலயம்

1 கம்பன் காவியம்
2. கம்பராமாயணமும் ஜைனராமாயணமும்
3 கம்பனைக் கற்கும் நெறிகள்
4. கம்பன் ஆராய்ச்சிப் பதிப்பு
(1950-ல் காரைக்குடி கம்பன் விழா பேச்சு)
5. இராம காதை
(1954-ல்காரைக்குடியில்முருகப்பாவின் பாலகாண்ட வெளியீட்டுவிழா பேச்சு)
6. இராமாயணப் பதிப்பு முயற்சிகள்
7 கம்பனும் தமிழும்
8 கம்பன் கவிச்சக்கரவர்த்தி

அனுபந்தம்

1. Kamban Edited by T. K. C. (Hindu' 54)
2. Age of Kamban a Refounder (Indian Express)
3. Kamban
4. கவிமணி கடிதம்
5. கம்பராமாயண பதிப்பு விவரம்

(12) *சொற்கலை விருந்து*

மார்ச் 1956 பாரி நிலையம்

1. மொழியின் அதி அற்புத இயல்பு
2. பேச்சும் மொழியும்
3. சொல்லும் மொழியும்
4. சொல்லின் வளர்ச்சி
5. சொல்லும் பொருளும் (தினமணி 57)
6. தாய்மொழி
7. ஆதாரமொழித்திட்டம் (P. B. பல்லர்ட்டின் கட்டுரைத் தழுவல்)
8. சொல் வரலாற்று நியதி
9. சொல் வரலாற்று விநோதங்கள்
10. மொழி நூல் விநோதங்கள்
11. தமிழும் பிராகிருதமும்
12. தமிழும் வைதிக வார்த்தைகளும்
13. பாலிமொழியும் தமிழும்
14. தமிழும் மலையாளமும் (திருவனந்தபுரம் AI பேச்சு)
15. இலக்கியத்தில் மொழி வழக்கு
16. சொல்லின் ஒலிவடிவும் வரிவடிவும்
17. சொல்லாக்கம்

(13) *சொற்களின் சரிதம்*

1956 பாரிநிலையம்

1. கழகம்
2. களம்

3. கண்வட்டம்
4. பொழுது
5. முன்னிலைப்பெயர்
6. தோடு
6. கந்தருவர்
8. பஞ்சம்
9. சாதுகைமாந்தர்

14 திராவிட மொழிகளின் ஆராய்ச்சி
டிசம்பர் 1956 தமிழ் புத்தகாலயம்

15 History of Tamil Language and Literature
(Beginning to 1000 A D)
First Published Dece 1956
New century Book House

Part I

History of Tamil Language and Literature beginning to 390 A D

Part II (A D 300 - 1000)

1. Anthologies
2. Grammatical works
3, The Didaetic works
4. Bhakti mcvement
5. Secular Literature

(16) இலக்கியச் சிந்தனை
1956 பாரி நிலையம்

1. இலக்கியமாவது யாது
2. இலக்கியத்தின் பயன்
3. இலக்கியதகின் முதல் தோற்றம்
4. தமிழ் இலக்கியத்தின் தொன்மை 1
5. தமிழ் இலகக்கியத்தின் தொன்மை 2

6. தமிழ் இலக்கியத்தின் தொன்மை 3
7. இலக்கியமும் சமூகமும்
8. சங்க இலக்கியங்கள் — 1
9. சங்க இலக்கியங்கள் — 2
10. பதினாறும் நூற்றாண்டு இலக்கியம்
11. பத்தொன்பதாம் நூற்றாண்டில் இலக்கியம்
12. நூதன ஆங்கிலப் பேரகராதி
13. வடமொழியும் தமிழும்
14. பலவகை இலக்கணங்களின் அவசியம்
15. தமிழகராதி
16. தமிழும் அகராதியும்
17. கூத்தும் இசையும்
18. நாடகக் கலையின் வரலாறு
19. தமிழில் நாட்டிய நூற்கள்
20. மதனநூல் வரலாறு
21. மதுரையும் தமிழ் இலக்கியமும்

(17) இலக்கணச் சிந்தனைகள்

1956 பாரிநிலையம்

1. பாணினீயம்
2. தொல்காப்பியரும் மொழிவளர்ச்சியும்
3. சிலப்பதிகாரத்தில் சில இலக்கண வழக்குகள்
4. அண்மை விளி
5. உறுப்புச் செய்யுள்
6. வரலாற்று இலக்கணம்
7. தத்துவ சாஸ்திரமும் இலக்கணமும்.

(18) தமிழ் இலக்கியச் சரித்திரத்தில் காவிய காலம்

ஜனுவரி 1957 பாரி நிலையம்

(திருவிதாங்கூர் சர்வகலாசாலையின் ஆதரவில் 1949 ஜனுவரி 24 முதல் 29 வரை நிகழ்த்திய சொற்பொழிவுகள்)

1. காவியம்
2. காவியகாலம்
3. காவியங்களின் வரலாறு
4. காவியங்களின் பொது இயல்பு
5. காவியங்களின் ஒடுங்கு நிலை

அனுபந்தம்

ஆசிரியர் நூல் பெயர் அகராதி
காப்பிய உவமை
தமிழகத்தில் திருமணம்
மறைந்து போன ஒரு காவியம்
வர்ணனை மரபுகள்

(19) இலக்கிய விளக்கம்

மே 1958 தமிழ்ப்புத்தகாலயம்

1. கலியுகப் பெருங்காவியம்
   (AIR பேச்சு 1951)
2. இரவிக்குட்டிப் பிள்ளை போர்
3. பாரத வெண்பா
4. கலிங்கத்துப் பரணியில் நகைச்சுவை
   (திருவனந்தபுரம் AIR பேச்சு 1953)
5. பரிபாடலும் நகைச்சுவையும்
   (திருவனந்தபுரம் AIR பேச்சு 1953)
6. சிலப்பதிகாரத்தில் கண்ட ஓர் இலக்கண வழக்கு-I
7. சிலப்பதிகாரத்தில் கண்ட ஓர் இலக்கண வழக்கு—II
8. நான்மணிக்கடிகை.
9. தைந்நீராடல்
10. வள்ளுவரும் மனுவும்
11. தம்ம பதம்
12. பஞ்சதந்திர மொழிபெயர்ப்பு
13. புதிய இலக்கிய முறை
14. புத்தாண்டில் புது முயற்சி

15. திருக்குற்றாலப் பள்ளு
16. சொல்லின் ஒலிவடிவும்

(20) அகராதி நினைவுகள்

1959 தமிழ்ப்புத்தகாலயம்

1. அகராதி நினைவுகள்
2. அகராதி அனுபவங்கள்
3. கற்றதனால் ஆயபயன்
4. சிறு குழந்தைகளுக்குச் செய்யுட் பாடங்கள்
5. பண்டைத் தமிழ் நாடும் சமயமும்
6. பக்தியும் தெய்வ வரலாறுகளும்
7. பக்திப் பெருவெள்ளம்
8. பக்தி வெள்ளத்தின் விளைவு
9. பக்திக் கனியின் தீஞ்சாறு
10. வடநாட்டில் கண்ணன்
11. அவதாரங்களும் தென்னாட்டு தொடர்பும்
12. ராதாவும் கிருஷ்ணனும்
13. தமிழ்மொழிப் பற்றும் பிறமொழி வெறுப்பும்

(21) ராஜி – நாவல்

அனுபந்தம் 3

பேராசிரியர் பதிப்பித்த நூற்கள்

1.	திருமூலர் திருமந்திரம்	1922
2.	மனோன்மணியம்	,,
3.	துகில் விடு தூது	1929
4.	நாம தீப நிகண்டு	1930
5.	அரும்பொருள் விளக்க நிகண்டு	1931
6.	களவியல் காரிகை	,,
7.	நவநீதப் பாட்டியல்	,,

8. கம்பராமாயணம் யுத்தகாண்டம் 1–3 படலம் 1932
9. குருகூர் பள்ளு ,,
10. தினகர வெண்பா ,,
11. திருக்குறுங்குடி அழகியநம்பி உலா ,,
12. கம்பராமாயணம் பாலகாண்டம் 1–7 படலம் 1933
13. திருமுருகாற்றுப்படை (புதிய உரை) ,,
14. தொல்காப்பியம் - பொருள் - இளம் பூரணம் ,,
15. நெல் விடு தூது ,,
16. பூகோள விலாசம் ,,
17. முப்பந்தொட்டி உலா ,,
18. இராஜ இராஜ தேவருலா 1934
19. தொல்காப்பியம் – பொருள் - நச்சினார்க்கினியம் ,,
20. பணவிடு தூது (இராமலிங்கேசர் மீது) ,,
21. பொதிகை நிகண்டு ,,
22. மதுரைக் கோவை ,,
23. தெய்வச்சிலையார் விறலி விடு தூது 1936
24. நான்மணிக்கடிகை ,,
25. பழமொழி ,,
26. புறத்திரட்டு 1938
27. கயாதர நிகண்டு 1939
28. சங்க இலக்கியம் 1940
29. ஜீவக சிந்தாமணி 1941
30. திருமுருகாற்றுப்படை பழைய உரை 1943
31. திவ்வியப்பிரபந்தம் ,,
32. ஸ்ரீபுராணம் ,,
33. இனநாற்பது 1944
34. திரிகடுகமும் சிறுபஞ்சமூலமும் ,,
35. இனியவை நாற்பது 1949
36. ராமப்பையன் அம்மானை 1950

(பதிப்பித்த ஆண்டு தெரியாதவை)

37. அருள் முருகாற்றுப்படை
38. கொண்டல் விடு தூது
39. கைலாச நிகண்டு
40. சாத்தூர் நொண்டி நாடகம்

41. திருப்பணி மாலைகள்
(தென் திருப்போரை, திருக்கோளூர்)
42. ஜீவசம்போதனை

அனுபந்தம் 4

பேராசிரியர் கட்டுரை எழுதிய மலர்களும் இதழ்களும்

1) அமுதசுரபி 2) ஆனந்தவிகடன் 3) இலக்கியப் பூந்துணர்; 4) இலக்கிய மண்டபம்; 5) ஈழகேசரி; 6) உரைமணிமாலை: 7) கதிர்: 8) கரந்தைத் தமிழ்ச் சங்க வெள்ளி விழா மலர் – 1938; 9) கலைமகள்; 10) கல்கி தீபாவளி மலர்; 11) காவியக் காதல்; 12) குமரகுருபரன்; 13) குமரிமலர்; 14) சக்தி; 15 சந்திரா; 16) சற்குணர் அறுபதாம் ஆண்டு மலர் (1937); 17) சித்தாந்தம்; 18) சித்திரா வாசகம்; 19) சிந்தனை; 20) சில்பஸ்ரீ; 21) சுதேசமித்திரன் 22) செந்தமிழ் 23) டாக்டர் குன்கஹன ராஜா அன்பளிப்பு மலர்; 24 தமிழ்ப்பொழில்: 25 தமிழ் நேசன்: 26) திரு வி. உலகநாத முதலியார் மணிவிழா மலர்: 27) தினமணிக் கதிர். 29) நவநீதம: 30) நாட்டியம் 31) பாரததேவி: 32) பிரசண்ட விகடன்: 33 லோகோபாரி 34) வ உ சி மலர் (பம்பாய் தமிழ் சங்கம் 35) வசந்தம் 36) விவேக போதினி: 37) வை மு கோ அறுபதாம் ஆண்டு மலர் 38) ஹனுமான்: 39 ஜகன் மோஹினி 40) ஸர் சி. பி. சிவசாமி அய்யர் அறுபதாம் ஆண்டு மலர்: 41) புதுமைப் பித்தன் நினைவு மலர் (1951).